வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 06 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 103 பக்கங்கள் : 16

# புத்தாண்டுக்கு பின்னர் அமைச்சரவை மாற்றம்

## அமைச்சர்களின் எண்ணிக்கை உயரும்

கொழும்பு, ஏப்ரல் 13

**தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை மாற்றம் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டின் பின்னர் நிகழக்கூடிய சாத்தியம் இருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.**

அமைச்சரவை மாற்றம் தொடர்பான கலந்துரையாடல்களை அண்மைய நாட்களில் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா வழிநடத்தி வருவதாக தெரியவருகின்றது.

தற்போது கூடுதலான அமைச்சுப் பொறுப்புகளை வைத்திருக்கும் அமைச்சர்களின் பொறுப்புகள் புதியவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

அதன் பிரகாரம் அமைச்சர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படவுள்ளது.

தற்போதைக்கு பிரதி அமைச்சராக இருக்கின்ற இளம் அரசியல்வாதியொருக்கும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது. (அ)

# கைதான பிள்ளையானுக்கு 90 நாட்கள் தடுப்புக்காவல்!

கொழும்பு, ஏப். 13

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொள்வதற்காக பிள்ளையானை (சிவனேசதுரை சந்திரகாந்தன்) 90 நாட்கள் தடுப்புக்காவலில் வைப்பதற்கான உத்தரவைப் பெற்றுள்ளது.

இதேவேளை, கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல்போன சம்பவம் தொடர் பில் சந்தேகத்தின் அடிப்படையில் தமிழ் 15

# வாக்குச் சீட்டு அச்சிடும் பணி இம்மாத இறுதிக்குள் நிறைவு

கொழும்பு, ஏப்.13

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு 14 நிர்வாக மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக அரச அச்சகம் தெரிவித்தது.

ஒரு கோடியே 10 இலட்சம் வாக்குச்சீட்டுக்கள் இது வரை அச்சிடப்பட்டுள்ளதாக 15

# தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் கலாசாரம் நாட்டில் தலையெடுப்பு!

## ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ்

கொழும்பு, ஏப். 13

பொலிஸ்காவலின் கீழான உயிரிழப்புக்கள் தன்னிச்சையான கைதுகள் மற்றும் தடுத்துவைத்தல் என்பவற்றுடன் நெருங்கிய தொடர்புடையவை எனவும், அவை தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் கலாசாரம் உருவாவதற்கு வழிவகுக்கிறது எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி பொலிஸ் நிலையத்திலோ அல்லது சிறைச்சாலையிலோ இடம்பெறும் காவலின் கீழான உயிரிழப்புக்கள் தொடர்பில் சுயாதீன அதிகாரிகளால் உடனடியாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் காவலின் கீழ் வைக்கப்பட்டிருந்த 15

# அமெரிக்க வர்த்தகத்துறையுடன் இலங்கை அரசு பேச்சுவார்த்தை!

கொழும்பு, ஏப். 13

இலங்கைக்கு அமெரிக்கா விதித்துள்ள பரஸ்பர தீர்வை வரி குறித்து அமெரிக்காவின் வர்த்தகத்துறைப் பிரதிநிதிகளுடன் சுமூகமாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். கிடைக்கப் பெற்றுள்ள 90 நாட்களைச் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்வோமென தொழில் அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

அமெரிக்காவினால் இலங்கைக்கு விதிக்கப்பட்டுள்ள பரஸ்பர தீர்வை வரி தொடர்பில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அமெரிக்காவின் பரஸ்பர தீர்வை குறித்து விரிவாக பேசப்பட்டது. பல யோசனைகளை முன்வைத்துள்ளனர். அவற்றை முழுமையாக பரிசீலனை 15

# இலங்கை பொருளாதாரம் நிச்சயமற்ற தன்மையில்!

## நாணய நிதியம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 13

அண்மைய வெளிப்புற அதிர்ச்சி மற்றும் சர்வதேச நடவடிக்கைகள் இலங்கையின் பொருளாதாரத்துக்கு நிச்சயமற்ற தன்மையை உருவாக்கியுள்ளதாகச் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழு மேற்கொண்ட சந்திப்புகள் தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த குழு இலங்கை அதிகாரிகளுடன் பொருளாதாரச் செயல்திறன் மற்றும் நீடிக்கப்பட்ட நிதி 15



# மன்னார் சென்றார் ஹரிணி!

கொழும்பு, ஏப். 13

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று சனிக்கிழமை மதியம் மன்னாருக்கு விஜயம் செய்த நிலையில் மன்னார் மாவட்டம் நானாட்டான் பிரதேச சபை தேர்தலில் போட்டியிடும்,தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டார்.

தேசிய மக்கள் சக்தியின் நானாட்டான் பிரதேச சபை வேட்பாளர்களை ஆதரித்து நேற்று சனிக்கிழமை மதியம் நானாட்டான் பிரதான மண்டபத்தில் வேட்பாளர் அறிமுக கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மா.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த கூட்டத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமர சூரிய குறித்த கூட்டத்தில் கலந்து 15

# தையிட்டி விகாரைக்கு எதிராகப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஏப். 13

வலி. வடக்கு, தையிட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள சட்ட விரோத விகாரைக்கு எதிரான போராட்டம் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

தையிட்டி சட்டவிரோத விகாரையினை அகற்றக்கோரி நேற்றுக் காணி உரியாளர்கள் போராட்டத்தை மீளவும் ஆரம்பித்துள்ளனர்.

தற்போதைய அரசும் தொடர்ச்சியாக தமக்கான நீதியை வழங்க மறுத்துவருவதாக போராட்டக்காரர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

தங்கள் போராட்டம் இரண்டு வருடங்கள் கடந்தும் தீர்வு இன்னும் எட்டப்படவில்லை 15

# அடிப்படைவாதத்திலிருந்து இளைஞர்களை காப்போம்!

## மட்டக்களப்பில் ஜனாதிபதி

மட்டக்களப்பு, ஏப். 13

இளைஞர்களை அடிப்படைவாதத்திலிருந்து பாதுகாப்பதற்காக எடுக்கக்கூடிய அனைத்து முயற்சிகளையும் அரசாங்கம் எடுக்கும் என ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க தெரிவித்தார்.

இந்த நாட்டில் முஸ்லிம் மக்களை பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகயும் தேசிய மக்கள் சக்தியே முன்னெடுத்துவந்தது. இன்று முஸ்லிம்கள் தேசிய மக்கள் சக்தியுடனேயே உள்ளனர் எனவும் 15

# சஜித்தை டில்லிக்கு அழைத்துள்ள மோடி

கொழும்பு, ஏப். 13

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவை டில்லிக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதமர் நரேந்திர மோடி, கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்து இரு தரப்பு கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தார்.

இதன்போதே டில்லி விஜயத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டது.

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் 15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தற்காலிக அனுமதி பத்திரமின்றி பஸ் சேவையில் ஈடுபட முடியாது

## வடமாகாண போக்குவரத்து அதிகார சபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 13

**எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதியிலிருந்து (01.05.2025) அலுவலக போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகள் தற்காலிக அனுமதிப் பத்திரமின்றி சேவையில் ஈடுபட முடியாது என்று வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் க. மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.**

அனுமதிப் பத்திரமின்றி சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அலுவலர்களுக்கான பஸ் போக்குவரத்து சேவையில் ஈடுபடுபவர்கள் இவ்விடயம் தொடர்பில் கருத்தில் கொள்வதன் மூலம் தமக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களைத் தவிர்த்து கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வடமாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அலுவலர்களுக்கான போக்குவரத்து சேவையை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகள் வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அலுவலர்களுக்கான விசேட போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் பேருந்துகளுக்கு தற்காலிக அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான படிமுறைகள் தொடர்பான பத்திரத்துக்கு 03. 03. 2025 அன்று வடமாகாண ஆளுநரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் வடக்கு மாகாணத்தில் அலுவலர்களுக்கான போக்குவரத்து சேவையில் ஏற்கனவே ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அனைத்து பேருந்துகளும் வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் அலுவலர்களுக்கான போக்குவரத்து சேவைக்கான தற்காலிக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டியது கட்டாயமானதாகும்.

இந்த தற்காலிக அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பபடிவங்களை வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்வதற்கு எதிர்வரும் 30ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்படுகின்றது.

01.05.2025 இற்கு பின்னர் அலுவலக போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகள் யாவும் பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு தற்காலிக அனுமதிப்பத்திரமின்றி சேவையாற்றும் பேருந்துகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-05)

# பௌத்த சிங்கள பேரினவாதத்தை நிறுவனமயப்படுத்தியது ஜே.வி.பி.

## ஐங்கரநேசன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏக்.13

தென்னிலங்கை அரசியலும் பௌத்தமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தது. சுதந்திரம் பெற்ற காலம் தொட்டு தென்னிலங்கை அரசியலில் பௌத்த சிங்கள பேரினவாதம் கோலோச்சி வந்துள்ளது. ஆனால், அதனை நிறுவனமயப்படுத்தி பிக்குகளுக்கென்று தனியானதொரு அணியை உருவாக்கியது ஜே. வி.பி. மாத்திரமே என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜே.வி.பியின் முன்னணி அமைப்புகளில் மகளிர் அணி, உயர்கல்வி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் அணிகளுடன் மூன்றாவதாக பிக்குகளுக்கென்று தனியானதொரு அணியும் உருவாக்கப்பட்டது. இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்தில் இந்திய விஸ்தரிப்புக்கு எதிரான போராட்டம் என்ற பெயரில் தமிழின விரோதப் போக்கை சிங்கள மக்களிடையே இந்தப் பிக்குகள் அணியின் மூலமே ஜே.வி.பி. விதைத்தது என்றும் அவர் கூறியுள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்ற தமிழ்த் தேசியப் பேரவையின் யாழ். மாநகர சபை வேட்பாளர்களின் அறிமுகக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்றது. இதில், கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


(எ-05)

# வங்கி கிளை மூடப்பட்டதால் வாடிக்கையாளர்கள் அவதி!

யாழ்ப்பாணம், ஏப்.13

யாழ். வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் உள்ள இலங்கை வங்கிக் கிளை நேற்று முன்தினம் நண்பகல் 12. 30 மணியுடன் மூடப்பட்டதால் அதிகளவான மக்கள், ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

2024 ஆம் ஆண்டின் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபையால் வழங்குவதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட ஊக்குவிப்பு கொடுப்பனவுக்கு நிதி அமைச்சு ஒப்புதல் வழங்குதல் தாமதமாக்கப்படுவதால் தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றமையால் வங்கி ஊழியர்கள் நண்பகல் 12: 30 மணியுடன் கருமைப் பீடச் சேவைகளில் இருந்து விலகுவதாக அறியத் தருகிறோம் என்று அறிவித்தல் பலகை வைக்கப்பட்டிருந்தது. (எ- 05)



# பெருந்தொகை கோடாவுடன் வவுனியாவில் ஒருவர் கைது

வவுனியா, ஏப். 12

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் கோடாவுடன் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பூவரசன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோயில் புளியங்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, மறைத்து வைக்கப்பட்டிருந்த 18 லீற்றர் கோடாவுடன் பரல் மீட்கப்பட்டதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த நபரும் கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (எ-10)

# வடமராட்சியில் டிப்பர் மோதி ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஏப்.13

யாழ். வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் டிப்பரும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்தார்.


இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற வடமராட்சி கிழக்கு, மாமுனை செம்பியன் பற்றைச் சேர்ந்த 39 வயது ஜே. நதீஸ்வரன் என்பவரே உயிரிழந்தார்.

விபத்துக்குள்ளான நபரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார். சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் டிப்பர் சாரதியை மருதங்கேணி பொலிஸார் கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# கீரிமலையில் கிணற்றிலிருந்து இரண்டு வெடிகுண்டுகள் மீட்பு!



யாழ்ப்பாணம், ஏப்.13

யாழ்ப்பாணம் கீரிமலை பகுதியில் நேற்று முன்தினம் வெடிகுண்டுகள் மீட்கப்பட்டன.

நாராயணன் சுவாமி கோவிலுக்கு அருகாமையில் உள்ள கிணறு ஒன்றை சுத்தம் செய்த போதே இவ்வாறு குண்டுகள் அவதானிக்கப்பட்டன.

இந்த நிலையில், காங்கேசன்துறை பொலிஸாருக்கு விடயத்தை தெரியப்படுத்திய நிலையில் ஆர். பி. ஜி. குண்டு மற்றும் 81 எம்.எம். குண்டு என்பன மீட்கப்பட்டன.

(எ-05)

# உழவியந்திரம் - மோ. சைக்கிள் மோதி விபத்து; முதியவர் பலி!

## சாரதி பொலிஸாரால் கைது .

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ்ப்பாணத்தில் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவியந்திரத்துடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் நோக்கி பலாலி வீதி வழியாக பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் ஆலயத்துக்கு அருகில், வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவியந்திரத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தின் போது, மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய முதியவரே உயிரிழந்தார்.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்து தொடர்பில் உழவியந்திரத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(எ)

# காரில் கஞ்சா கடத்தியவர் கைது

கொழும்பு, ஏப். 13

காரில் கேரள கஞ்சாவை கடத்திச் சென்றதாக கூறப்படும் சந்தேக நபர் ஒருவர் கல்கிஸ்ஸை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.


குறித்த நபர் இரத்மலானை பிரதேசத்தை சேர்ந்த 45 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 06 கிலோ 770 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் இனவாதத்துக்கு ஒருபோதும் இடமில்லை!

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு




அக்கரைப்பற்று, ஏப். 13

நாட்டில் இன, மத, மொழி, பேதமின்றி அனைத்து மக்களையும் சமமாக நடத்தும் அரசாங்கமொன்றை நாம் தோற்றுவித்துள்ளோம். ஆனால், தோல்வி அடைந்த அரசியல் கட்சிகள் மீண்டும் மக்களை பிளவுபடுத்த முயற்சிக்கின்றன. இந்த நாட்டில் இனி இனவாதத்துக்கு ஒருபோதும் இடமில்லை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் "வெற்றி நமதே - ஊர் எமதே" வெற்றிகரமான மக்கள் பேரணித்தொடர் நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் நடை பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் இலங்கை வரலாற்றில் விசேட தேர்தல்களாக அமைந்தன. இதற்கு முன்னர் நாட்டில் தேர்தல்கள் நடைபெற்றபோது மக்கள் இன ரீதியாகவும் மத ரீதியாகவும் பிளவுபடுத்தப்பட்டு வாக்களித்துக் கொண்டிருந்தனர்.

கிழக்கு மக்கள், முஸ்லிம் அரசியல் கட்சிகளுக்கும் வடக்கு மக்கள் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் தெற்கு மக்கள் சிங்கள அரசியல் கட்சிகளுக்கும் வாக்களித்தனர்.

ஆனால், கடந்த பொதுத் தேர்தலில் என்ன நடந்தது? முழு நாடும் ஒன்றுபட்டது. வடக்கு, கிழக்கு, தெற்கு மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தனர். தேர்தல் மூலம் மக்கள் ஒன்று பட்டனர். ஆனால், தோல்வியடைந்த அரசியல் கட்சிகள் மீண்டும் மக்களைப் பிளவுபடுத்த முயற்சிக்கின்றன.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முஸ்லிம் மக்களைப் புறக்கணிப்பதாக போலியான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்த அரசாங்கம் முஸ்லிம் மக்களுக்கு முன்னுரிமை அளிக்கவில்லை எனவும் கூறினர்.

ஆனால், நாம் நாட்டில் இன, மத, மொழி, பேதமின்றி அனைத்து மக்களையும் சமமாக நடத்தும் அரசாங்கமொன்றை தோற்றுவித்துள்ளோம்.

இதற்கு முன்னர் இந்த நாட்டில் திகனை, அக்குறனை, அளுத்கம போன்ற பிரதேசங்களில் வன்முறைகள் இடம்பெற்றன. மத வழிபாட்டு தலங்கள் அழிக்கப்பட்டன. இந்த நாட்டில் இதுபோன்ற வன்முறைகள் இனி ஒருபோதும் இடம் பெறாது.

அண்மையில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டமை தொடர்பில் கருத்துகள் முன் வைக்கப்படுகின்றன. உண்மையில் என்ன நடந்தது? எமது நாட்டில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தாக்குதல் இடம் பெற்றதன் பின்னர் முஸ்லிம் மக்கள் மிகவும் மோசமான வகையில் நடத்தப்பட்டனர்.

தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் முஸ்லிம் மக்கள் என்ன கூறினார்கள். இந்த நாட்டில் அடிப்படைவாத குழுக்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அது தொடர்பில் அரசாங்கத்துக்கு தெரிவித்தோம். பொலிஸாருக்கு கூறினோம் ஆனால், உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதன் கரும பலனை நாம் தற்போது அடைந்துள்ளோம் எனக் கூறினார்கள்.


எனவே, அரசாங்கம் என்ற வகையில் நாம் தீர்க்கமான முடிவுகளை எடுத்துள்ளோம். இவ்வாறான சம்பவங்கள் இந்த நாட்டில் இடம்பெறுவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது. அருகம்குடாவில் தாக்குதல் இடம்பெறவுள்ளதாக தகவல் கிடைத்தது.

இரவு பகல் பாராது நாம் அதற்காக முழுமூச்சாக செயல்பட்டோம். அறுவரை கைது செய்தோம். நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவே நாம் அதனை செய்தோம்.

அதேபோன்றே இந்த இளைஞரையும் கைது செய்தோம். அசம்பாவிதம் இடம்பெறுவதற்கு முன்னர் உரிய பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவே அரசாங்கம் உள்ளது. அசம்பாவிதம் இடம்பெற்றதன் பின்னர் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஒன்று தேவையில்லை அல்லவா? அசம்பாவிதம் இடம்பெறுவதற்கு முன்னர் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இது முஸ்லிம் மக்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட கைது அல்ல. நாட்டில் அமைதியை நிலைநாட்டவே அதனை செய்தோம்"- என்றார். (எ)

# அதிவேகத்தில் பயணித்த பஸ் விபத்து; பலர் காயம்!



சிலாபம், ஏப். 13

சிலாபம் - கொழும்பு பிரதான வீதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் பலர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுச் சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அதிக வேகத்துடன் பயணித்த தனியார் பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி அருகில் இருந்த மரம் மற்றும் வீடொன்றின் மதில் மீது மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. விபத்தின் போது பஸ்ஸில் பயணித்த பயணிகள் பலர் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் சாரதியின் கவனக் குறைவே விபத்துக்கு காரணம் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# போதைப்பொருள் கடத்தலுக்கு பயன்படுத்திய படகு கைப்பற்றல்

கொழும்பு, ஏப். 13

போதைப்பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் படகு ஒன்று கடற்படையினரால் நேற்றுச் சனிக்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளது.

கடற்படையினரால் காலி கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இந்த படகு கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# வடக்கு மாணவர்கள் சரியான துறையை தெரிவு செய்ய வழிப்படுத்த வேண்டும்

## இல்லையேல் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்கிறார் ஆளுநர் வேதநாயகன்

யாழ்ப்பாணம் ஏப்12

முன்னைய காலங்களில் இந்தியாவிலிருந்து ஆசிரியர்கள் இங்கு வந்து கற்பித்ததாக கேள்விபட்டிருக்கின்றேன். எதிர்காலத்திலும் அவ்வாறானதொரு நிலைமைதான் வரப்போகின்றதோ? என்று பல அதிபர்கள் எனக்குச் சொல்கின்றார்கள். சில பாடங்களுக்கு எங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாமல் போகப்போகின்றது. மாணவர்கள் இப்போதே சரியான துறைகளைத் தெரிவு செய்வதற்குரிய வழிகாட்டல்களை வழங்காவிடின் பாரதூரமான விளைவுகளை நாம் சந்திக்க வேண்டியிருக்கும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிகழ்வுகள் பாடசாலை மைதானத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. இதில், நேற்றுச் சனிக்கிழமை மூன்றாம் நாளின் காலை அமர்வில் - சாதனையாளர் கௌரவிப்பில் ஆளுநர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இதன்போது ஆளுநர் மேலும் உரையாற்றுகையில், "நான் சிறுவனாக படித்துக்கொண்டிருந்தபோது உங்கள் பாடசாலையின் ஹொக்கி அணி பிரபலமாக இருந்தது எனக்கு இப்போதும் நினைவிருக்கின்றது. உங்கள் பாடசாலை நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டிருக்கின்றது. அர்ப்பணிப்பான அதிபர்களால்தான் இடப்பெயர்வுகள் உள்ளிட்ட பல சவால்களைச் சந்தித்தாலும் பாடசாலை தலைநிமிர்ந்து நிற்கின்றது.

எங்கள் பிள்ளைகளுக்கு எவ்வாறான துறைகளைத் தெரிவு செய்ய வேண்டும் என்ற போதுமான வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டும். விஞ்ஞான, கணிதத் துறைகளைத் தெரிவு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கையும் குறைந்து செல்கின்றது. அவ்வாறு விஞ்ஞான மற்றும் கணிதத் துறைகளைத் தெரிவு செய்தாலும் அவர்கள் மருத்துவர்கள் அல்லது பொறியியலாளர்கள் என்ற நிலையைத்தான் தெரிவு செய்கின்றார்களே ஒழிய அதற்கு அடுத்த நிலையிலுள்ள துறைகளைத் தெரிவு செய்யவில்லை.

இதனால் எமது மாகாணத்தில் இருக்கின்ற துணை மருத்துவ வெற்றிடங்கள் உள்ளிட்ட பலவற்றை நிரப்புவதற்கு வேறு மாகாணங்களிலிருந்து ஆட்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

புதிதாக நியமனம் பெற்ற இளம் அதிபர்கள் பலரும் அவர்கள் பொறுப்பேற்ற பாடசாலைகளில் சொல்லிக்கொள்ளதக்களவு மாற்றங்களை உருவாக்கி வருவதாக கல்வி அமைச்சின் செயலர் எனக்கு கூறியிருந்தார். அதனை வரவேற்கின்றேன். அதிபர்கள் அர்ப்பணிப்புடன் செயல்பட்டால், சிறந்த தலைமைத்துவத்தை பாடசாலைக்கு வழங்கினால் முன்னேற்றத்தை நாம் கண்ணூடாகக் காணலாம்.

எங்களுடைய சமூகத்தில் வழிகாட்டிகளாக இருந்தவர்களின் பாதைகளை நாங்கள் பின்பற்றத் தவறுவதனால்தான் இன்றைய இளைய சமுதாயம் பிறழ்வான பாதையை நோக்கிச் செல்கின்றது. மாணவர்கள் கூடுதலாக பாடசாலையை விட்டு இடைவிலகும் சூழலும் ஏற்படுகின்றது. இதைச் சீர் செய்யத் தவறினால் நாம் எதிர்கால சந்ததிக்குச் செய்யும் துரோகமாகும். இதைமாற்றும் பொறுப்பு எல்லோருக்கும் இருக்கின்றது.

மாணவர்களுக்கு இலக்கு இருக்கவேண்டும். கல்வியில் எதைச் சாதிக்கப்போகின்றோம் என்ற தூர நோக்கு இருக்கவேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக மாணவர்களை கல்வியில் வளப்படுத்துவதுடன் மாத்திரமல்லாது தலைமைத்துவத்தையும் வளர்த்து விடவேண்டும்" - என்றார். (எ-2)

# பஸ் - மோ. சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழப்பு!

குருநாகல், ஏப். 14

குருநாகல் - புத்தளம் வீதியில் லக்மல் உயன பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி இரண்டு இளைஞர்கள் உயிரிழந்ததாக வாரியபொல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

குருநாகலில் இருந்து வாரியபொல நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று எதிர்த் திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவரும் படுகாயமடைந்த நிலையில் வாரியபொல மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

21 வயதுடைய இரண்டு இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து பஸ் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையானை தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதி

கொழும்பு, ஏப். 13

பிள்ளையான் என்று அழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவ நேசதுரை சந்திரகாந்தனை 90 நாட்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பிள்ளையான் கடந்த 08 ஆம் திகதி மாலை மட்டக்களப்பு பிரதேசத்தில் வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு, கைதுசெய்யப்பட்ட பிள்ளையான் பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 72 மணிநேரம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசார ணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், பிள்ளை



யானை மேலும் 90 நாட்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (எ)

## 28 மில்லியன் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளுடன் பெண்கள் கைது

கொழும்பு, ஏப்.13

28 மில்லியன் ரூபாய் பெறுமதியான தங்க ஆபரணங்களுடன் சவுதியிலிருந்து இலங்கை வந்த இரண்டு பெண்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில வைத்து சுங்க திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு சவுதியின் ஜெத்தாவிலிருந்து டுபாய்க்கு சென்று அங்கிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இருவரும் குருநாகல் பகுதியைச் சேர்ந்த 29 மற்றும் 35 வயதுடையவர்கள் ஆவர்.

932 கிராம் தங்க நெக்லஸ்கள் மற்றும் வளையல்களை அணிந்திருந்ததுடன் வியாபார நோக்கத்துக்காக தங்க நகைகளை கொண்டுவந்ததாக விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன், தங்க ஆபரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

வடக்கு மாகாணத்தில்

## பல பாடசாலைகள் மூடப்படும் நிலை!




யாழ்ப்பாணம், ஏப்.13

வடக்கு மாகாணத்தில் பல பாடசாலைகள் மூடப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிகழ்வுகள் பாடசாலை மண்டபத்தில் தொடர்ச்சியாக நடை பெற்று வருகின்றன. இதில் நேற்றுச் சனிக்கிழமை மூன்றாம் நாளின் காலை அமர்வில் சாதனையாளர் கௌரவிப்பில் ஆளுநர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாணவர்கள் அனுமதி குறைவடைந்து செல்கின்றது. எமது சனத்தொகை முன்னரை விட பல மடங்கு வேகத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது. பிறப்பு வீதம் குறைகின்றது. இதற்கும் அப்பால் வெளிநாட்டு மோகம் எம்மவரிடையே இன்றும் இருக்கின்றது. இவை எல்லாம் இணைந்து எமது மாகாணப் பாடசாலைகளின் மாணவர் அனுமதியில் தாக்கத்தைச் செலுத்துகின்றன என்றும் ஆளுநர் குறிப்பிட்டார். (எ-02)

## வெசாக் தினத்தில் பங்கேற்க வியட்நாம் செல்கிறார் அநுர



கொழும்பு, ஏப். 13

சர்வதேச வெசாக் தினத்தில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி வியட்நாம் செல்கின்றார்.

"உலக அமைதி மற்றும் நிலையான வளர்ச்சிக்கான பௌத்த நுண்ணறிவு" என்ற தொனிப்பொருளில் 2025 சர்வதேச வெசாக் தினம் இம்முறை கொண்டாடப்படுகின்றது. சுமார் 80 நாடுகளின் பிரதிநிதிகள் இந்த வெசாக் தினத்தில் பங்கேற்கவுள்ளனர்.

ஹோ சி மின் நகரில் அமைந்துள்ள வியட்நாம் பௌத்த நிலையத்தில் நடைபெறவுள்ள சர்வதேச வெசாக் தினம் மற்றும் சர்வதேச அறிவியல் மாநாட்டில் சுமார் 1,000 சர்வதேச பிரதிநிதிகள் உட்பட 2,000 பேர் வரை பங்கேற்கவுள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மற்றும் சில நாடுகளின் தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டுள்ளனர்.

2017 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடன் சர்வதேச வெசாக் வைபவம் இலங்கையில் நடைபெற்றபோது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சிறப்பு விருந்தினராக பங்கேற்றிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில் 2025 ஆம் ஆண்டு சர்வதேச வெசாக் தினத்தை மே மாதம் 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் வியட்நாமில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதில் சிறப்பு விருந்தினராக ஜனாதிபதி அநுரகுமார கலந்து கொள்ளவுள்ளார்.

# ஜனாதிபதி செயலகத்தில் பாதுகாப்பு பற்றி ஆராய்வு

கொழும்பு, ஏப்.13

பாதுகாப்புத் துறை தொடர்பான ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்காக, ஆய்வு மற்றும் அபிவிருத்தி வணிகமயமாக்கலுக்கான தேசிய அணுகுமுறை குழு ஏற்பாடு செய்த விசேட சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள பாதுகாப்பு ஆய்வு மற்றும் அபிவிருத்தி மையம், இராணுவம், கடற்படை, விமானப்படை, கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் மற்றும் பொலிஸ் ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவினர் இதில் பங்கேற்றனர்.

இலங்கையில் உள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் நிறைவு செய்யப்பட்ட மற்றும் நிறைவடையும் தரு வாயில் உள்ள ஆய்வுகளை பொருளாதார நடவடிக்கை களுக்கு திறம்பட பயன்படுத்தி அதற்காக முதலீடு செய்வதன் மூலம் நாட்டின் அபிவிருத்தியை விரைவுபடுத்துவதற்காக ஜனாதிபதி செயலகத்தின் கீழ் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்கான தொழில்நுட்ப மற்றும் அறிவியல் முன்னேற்றங்களில் பாதுகாப்புத் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. அதனைக் கருத்தில் கொண்டு இந்த தெளிவுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டதுடன், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கோமிக உடுகமசூரிய தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

பாதுகாப்புப் பிரிவினால் செயல்படுத்தப்பட்டு, தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ள ஆய்வு மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள், ஓரளவு முடிக்கப்பட்ட திட்டங்கள், எதிர்காலத்தில் திட்டமிடப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டன.(எ)

## ரயில் - ஓட்டோ மோதி விபத்து

இருவர் படுகாயம்

கொழும்பு, ஏப்.13

கொஸ்கம - அளுத்அம்பலம் ரயில் கடவைக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளதாக கொஸ்கம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுச் சனிக்கிழமை காலை 09.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஓட்டோ ஒன்று அவிசாவளையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது ஓட்டோவில் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் அவிசாவளை மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடையவர் சிக்கினார்

கொழும்பு, ஏப். 13

பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் மஹரகம பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொல்வத்த சந்தியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

30 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், சந்தேக நபர் மஹரகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பெண்ணொருவரிடமிருந்து 52 ஆயிரம் ரூபாய் பணத்தை கொள்ளையிட்டுள்ளதாகவும், வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பெண்ணொருவரிடமிருந்து பணப்பை மற்றும் கையடக்கத் தொலைபேசியை கொள்ளையிட்டுள்ளதாகவும் கிரிபத்கொடை பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றை திருடியதாகவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, கொள்ளையிட்டதாக கூறப்படும் பல்வேறு பொருட்கள் சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.(எ)

## இரண்டு இளைஞர்களின் சடலங்கள் நேற்று மீட்பு!

பதுளை, ஏப். 13

பதுளை - ஹாலிஎல நகரத்தில் நேற்றுச் சனிக்கிழமை இரண்டு இளைஞர்களின் சடலங்கள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலங்களாக மீட்கப்பட்ட இளைஞர்கள் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இரு இளைஞர்களில் ஒருவர் ஹாலிஎல நகரத்தில் உள்ள ஓட்டோ தரிப்பிடத்துக்கு அருகில் உள்ள கால்வாயிலிருந்து சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மற்றைய இளைஞன் ஹாலிஎல ரயில் நிலையத்துக்கு செல்லும் வீதியில் அமைந்துள்ள விகாரைக்கு அருகில் வைத்து சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

இனந்தெரியாத நபர்கள் சிலர் இந்த இளைஞர்கள் இருவரையும் கொலை செய்து சடலங்களை வீதியில் வீசி சென்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹாலிஎல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
13.04.2025 ஞாயிற்றுக்கிழமை

குரோதி வருடம், பங்குனி 29

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

# தேர்தல் போட்டியும், வெற்றியும்

தேர்தல்களின் போது நிலைமைகள் ஒரே மாதிரியாக இருப்பதில்லை - நிலைமைகள் மெதுவாகவும் மாற்றமடையலாம் அல்லது வேகமாகவும் மாற்றமடையலாம். உள்ளூராட்சித் தேர்தல் வெற்றியை இலக்கு வைத்து அனைத்து கட்சிகளும் தீவிரம் காண்பித்து வருகின்றன. வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் தமிழ்த் தேசிய தரப்புகளாக தங்களை அடையாளப்படுத்தியிருக்கும் கட்சிகள் பல அணிகளாக போட்டியிடுகின்றன. அனைவரும் இம்முறை பிரதான சவாலாக அரசாங்கத்தையே முன்வைத்து பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரையான தேர்தல் அனுபவத்தோடு ஒப்பிட்டால், ஆளும் தரப்பை பார்த்து தமிழ்த் தேசிய கட்சிகள் அஞ்சுவது இதுதான் முதல் தடவை எனலாம்.

தேசிய மக்கள் சக்தியை நிராகரிக்க வேண்டும் என்பதே அனைத்து தேசியவாத கட்சிகளினதும் - அதே வேளை கடந்த காலங்களில் ஆளும் தரப்புகளோடு இணைந்து செயல்பட்ட தமிழ் கட்சிகளினதும் ஒரே நிலைப்பாடாக இருக்கின்றது. நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி, வடக்கு, கிழக்கில் பெற்றுக்கொண்ட ஆதரவு தமிழ்த் தேசியவாத கட்சிகளை ஆட்டம் காணச் செய்துவிட்டது. அநுர அலையின் காரணமாகவே அவ்வாறான நிலைமை ஏற்பட்டதாக கூறி தங்களை ஆற்றுப்படுத்திக் கொள்ள முற்பட்டவர்கள், உள்ளூராட்சித் தேர்தலில் அந்த அலை குறைந்துவிட்டதான நம்பிக்கையுடன் இருப்பதாகத் தெரிகின்றது. ஆனாலும் தேசிய மக்கள் சக்தி தொடர்பான அச்சத்தை, அவ்வப்போது அவர்களின் தேர்தல் பிரசாரங்களில் வெளிப்படுத்தி வருகின்றனர்.

தேசிய மக்கள் சக்தியின் எழுச்சியானது, இதுவரையில் மற்றவர்கள் அனைவரையும் விமர்சிப்பதையும் குற்றம்சாட்டுவதையும் நோக்கமாகக் கொண்டு செயல்பட்டுவந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (முன்னணி) கட்சியைக் கூட, ஒரு புதிய கூட்டணியை நோக்கித் தள்ளியிருக்கின்றது.

தூய தேசியவாதம் பேசுவதை பிரதான இலக்காகக் கொண்டிருந்த அந்த கட்சி, கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, சங்கு சின்னத்தில் பொது வேட்பாளருக்கான கூட்டணியில் இணைந்து செயல்பட்ட இரண்டு கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்திருப்பதானது, முன்னணியின் அரசியல் புரிதலில் ஏற்பட்ட மாற்றத்திற்கான சான்றாகும். அதிலும் கூட்டணியில் இணைந்திருக்கும் ஒரு கட்சி, கடந்த பொதுத் தேர்தலின் போது, சங்குச் சின்னத்தில் தேர்தலில் போட்டியிட்ட கட்சியாகும். அரசியல் நிர்பந்தங்கள் எவ்வாறு தூய்மை வாதங்களை தோற்கடிக்கின்றது என்பதற்கான அண்மைய உதாரணமாக, சைக்கிள் சின்னக் கூட்டணியை குறிப்பிடலாம்.

உள்ளூராட்சித் தேர்தலில் எவ்வாறேனும் தேசிய மக்கள் சக்தியை வடக்கு, கிழக்கில் இரண்டாம் நிலைக்குத் தள்ள வேண்டும் என்பதே அனைத்து தமிழ்த் தேசியவாத கட்சிகளினதும் பிரதான இலக்காக இருக்கின்றன. ஆனால், மேற்படி கட்சிகள் கடந்த பதினைந்து வருடகால அரசியலை சரியான திசை வழியில், ஒற்றுமையுடன் முன்னெடுத்திருந்தால், ஒரு தென்னிலங்கை கட்சியை பார்த்து அச்சம் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

தேசிய மக்கள் சக்தியின் தமிழர் பிரிவும் வீரியத்துடன் இருப்பதாகத் தெரியவில்லை - வெறுமனே அநுர என்னும் ஒரு மனிதரின் வசீகரத்தில் மட்டுமே அவர்கள் அனைவரும் குதிரை சவாரி செய்வதாகத் தெரிகின்றது. இந்த நிலையில் உள்ளூராட்சித் தேர்தலை தமிழ் மக்கள் எவ்வாறு நோக்கப் போகின்றனர்? வெறுமனே கட்சிச் சின்னங்கள், கூட்டணிகளை மட்டும் நம்பி வாக்களிக்கப் போகின்றனரா அல்லது வேட்பாளர்களை கருத்தில் கொண்டு வாக்களிக்கப் போகின்றனரா? உண்மையில் உள்ளூராட்சித் தேர்தலில் சின்னங்களை விடவும் வேட்பாளர்கள்தான் முக்கியம். ஏனெனில், உள்ளூராட்சி என்பது மக்களோடு மக்களாக இருந்து, பணியாற்றும் ஒரு குட்டி அரசாங்கம்.

# வடக்கில் 3 முதலீட்டு வலயங்களில் முதலிட புலம்பெயர் முதலீட்டாளர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 13

வடமாகாணத்தில் அமையவுள்ள 3 முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் வடமாகாணத்தை சேர்ந்த முதலீட்டாளர்கள் மற்றும் வடமாகாணத்தை சேர்ந்த புலம்பெயர்ந்த முதலீட்டாளர்களை முதலீடுகளை மேற்கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது. இது தொடர்பில் வணிகர் கழகம் விடுத்துள்ள அறிக்கையில்,

வடமாகாணத்தில் 3 இடங்களில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் அமையவுள்ளது -

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை வளாகம் (350 ஏக்கர்கள்), பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை வளாகம் (200 ஏக்கர்கள்), மாங்குளம் நகர அபிவிருத்தி வளாகம் (600 ஏக்கர்கள்).

**முன்னெடுக்கக்கூடிய தொழில்கள்** - விவசாயம் சார் பெறுமதிசேர் தொழிற்சாலைகள், மீன்பிடி சார் பெறுமதிசேர் தொழிற்சாலைகள், மின்சார உபகரணங்கள், தொழிற்சாலை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், கடதாசி சார் உற்பத்திப்பொருட்கள், மருத்துவ உபகரணங்கள், ஆடைத்தொழிற்சாலைகள், இரசாயனம் சார் உற்பத்திப் பொருட்கள்.

**கிடைக்கக்கூடிய வசதிகள்** - நீர்வழங்கல், கழிவுநீர் முகாமைத்துவம், உள்ளக வீதி வசதிகள், மின்சார வசதிகள்

**கிடைக்கக்கூடிய முதலீட்டு ஊக்குவிப்புக்கள்**

முதலீட்டுக் கழிவுரிமை 200 வீதம்,

30 வருட குத்தகை பொதுவான நடைமுறை (தேவையை பொறுத்து நீடித்துக் கொள்ளலாம்)

தொழிற்சாலைகளுக்குத் தேவையான அனுமதிகளை முதலீட்டு சபை ஒழுங்கமைத்து வழங்கும்.

தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திரங்கள், உபகரணங்கள், தளபாடங்கள், கட்டட நிர்மாணத்துக்குத் தேவையான பொருட்கள் போன்றவற்றிற்கு இறக்குமதி தீர்வை விலக்கு அளிக்கப்படும்.

ஏற்றுமதி நோக்கிலான தொழில் முயற்சிகளுக்கு தேவையான மூலப்பொருட்களை தீர்வை இன்றி இறக்குமதி செய்யலாம்.

எனவே, மிக குறுகிய காலகட்டத்தில் வடமாகாணத்தில் அமையவுள்ள 3 முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் வடமாகாணத்தை சேர்ந்த முதலீட்டாளர்கள் மற்றும் வடமாகாணத்தை சேர்ந்த புலம்பெயர்ந்த முதலீட்டாளர்களை இந்த 3 வலயங்களிலும் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுக் கொள்கின்றது.

இதன் மூலம் வடமாகாணம் பொருளாதார ரீதியாக முன்னேறவும், தேசிய ரீதியாக எமது உற்பத்தியின் பங்களிப்பை அதிகரித்து கொள்ள முடிவதுடன் வடமாகாணத்தில் அதிகளவானோருக்கு வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுப்பதற்கும் ஏதுவாக அமையும்.

மேற்படி பிரதேசங்களில் சர்வதேச தரத்தில் அமையவுள்ள முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க ஆர்வமுள்ள முதலீட்டாளர்கள் தமது விண்ணப்பங்களை இலங்கை முதலீட்டு சபைக்கு சமர்ப்பிக்க முடியும். ஆகவே, இந்த வருட இறுதியில் இவ் மூன்று வலயங்களும் உருவாக இருப்பதனால் விரைவாக விண்ணப்பிக்குமாறு யாழ். வணிகம் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது. (எ)

# துப்பாக்கி சூட்டுக்கு பயன்படுத்திய ரி - 56 ரக துப்பாக்கி கைப்பற்றல்!

மாத்தறை, ஏப். 13

மாத்தறை - தெவிநுவர பகுதியில் கடந்த 21 ஆம் திகதி இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்ட தாக கூறப்படும் ரி - 56 ரக துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் நேற்றுச் சனிக்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மாத்தறை, கெக்கனதுர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்த துப்பாக்கி கைப்பற்றப்பட்டுள்ளது.


தெவிநுவர பகுதிக்கு கடந்த 21 ஆம் திகதி இரவு 11.45 மணியளவில் வானில் சென்ற இனந்தெரியாத நபர்கள் சிலர் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவரை சுட்டுக் கொலை செய்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இளைஞர்கள் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

தெவிநுவர பகுதியைச் சேர்ந்த ககுன் தாரக்க என்ற 29 வயதுடைய இளைஞனும் யொமேஷ் நதீஷான் என்ற 28 வயதுடைய இளைஞனுமே இவ்வாறு உயிரிழந்தனர்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய பல சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறையற்ற உலகைப் படைப்போம்!

க.பழனித்துரை

நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாடுகள் நடத்துவது வழக்கம். உதாரணமாக ஜி 7 உச்சி மாநாடு என்று பெயரிட்டு அந்தக் குழுவில் இருக்கும் நாடுகளின் தலைவர்கள் பொருளாதார வளர்ச்சி, தொழில்நுட்ப அறிவியல் பரிவர்த்தனை, வணிக விரிவாக்கம் எனப் பொருளாதாரம் பற்றியதாகவே அந்த விவாதங்கள் இருக்கும். அந்தத் தலைவர்கள் உலகில் நடைபெறும் வன்முறை, போர் அமைதியற்ற சூழல் பற்றி ஏன் விவாதிக்க முன்னுரிமை கொடுப்பதில்லை என்று கேள்விகள் எழுகின்றன.



இன்றைய சூழலில் நாடுகளுக்கிடையே பதற்றம் நிலவுகிறது. நாடுகளில் போர் நடப்பதையும் நாம் பார்த்து வருகிறோம். நாட்டுக்கு உள்ளே அரசியலில் வன்முறையும் சமூகப் பிணக்கும் நிறைந்து சமூகங்கள் மோதிக் கொள்வதையும் நம்மால் பார்க்க முடிகிறது. இவ்வளவு அறிவியல், தொழில் நுட்பம், பொருளாதார வளர்ச்சி, கல்வியறிவு உயர்ந்த நிலையில் இருந்தும் உலகத்தில் மக்கள் மத்தியில் அமைதியும், மகிழ்ச்சியும் இல்லாமல் போரும் வன்முறையும் வெடித்த வண்ணம் இருப்பதைத் தான் நாம் பார்த்து வருகிறோம்.

போரும், வன்முறையும் ஒரு நாளும் மானுடத்துக்கு வளர்ச்சியை மேம்பாட்டைக் கொண்டு வராது. அமைதியான சமூகங்கள் நாடுகள் மட்டுமே வளர்ச்சியைக் கொண்டு வந்ததை நாம் வரலாற்றில் பார்க்கிறோம்.

இன்று 80 சதவீத மக்கள் மக்களாட்சியின் கீழ் இருக்கின்றனர். மக்களாட்சி பல வடிவங்களில் இருந்தாலும் மக்களாட்சியில் இருப்பதற்கு முதல் அடையாளம் தேர்தல். அது நடைபெற்று வருகிறது. மக்களாட்சி ஒரு நாட்டில் முறையாக நடந்தால், அது மக்களிடம் அமைதியை ஏற்படுத்தும். வன்முறை மக்களாட்சிக்கு எதிரானது. மக்களாட்சி எந்தப் பிரச்னைக்கும் தீர்வுகாணும் வல்லமை உடையது. இருந்தும் மக்களாட்சி நடைபெறும் நாட்டில் பெரும் வன்முறை நிகழ்வதைப் பார்க்கிறோம். இது ஏன் இந்த முரண்பாடு ?

பொதுவாக மக்கள் விரும்புவது அமைதியையும் மகிழ்ச்சியையும்தான். போரையோ, வன்முறையையோ மக்கள் விரும்புவதில்லை. அப்படி என்றால் போரும், வன்முறையும் எங்கிருந்து வருகிறது? போர் என்பது நாட்டின் தலைமையிலிருந்து எழுவது. ஆதிக்கத்தை நிலைநாட்டும் ஒருவித உளவியல், போருக்கு வித்திடுகிறது. அதே போல் ஆதிக்கத்தை எதிர்க்க அல்லது ஆதிக்கத்திலிருந்து விடுபட அல்லது தங்கள் நாட்டைப் பாதுகாத்துக் கொள்ள நாடுகள் போரில் ஈடுபடுகின்றன. சமுதாயத்தின்மீது வன்முறை திணிக்கப்படுகிறது. இந்த வன்முறையை யார் திணிக்கிறார்கள் என்று ஆராய்ந்தால் அந்த வன்முறையால் யாருக்கு பலன் கிடைக்கிறதோ, அவர்கள் தூண்டுகின்றனர். இந்தப் போரினால், நாடும் சமூகமும் ஒட்டுமொத்த வளர்ச்சியை இழக்கிறது. அமைதியை இழக்கிறது.

போரும் வன்முறையும் நிகழ்கின்ற இடங்களில் மக்களின் அத்தியாவசியத் தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன. மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் சிதைக்கப்படுகின்றன. இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன. இவற்றால் அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள், குழந்தைகள், ஏழைகள். நாட்டின் தலைவரால் போர் மக்கள்மீது திணிக்கப்படுகிறது. அதே போல் சமூகத்தை வழிநடத்துவோரால் மக்களின்மீது வன்முறை திணிக்கப்படுகிறது.

போருக்கு எதிரான உளவியல் சிந்தனைச் சூழல் வலுவாக சமுதாயத்தில் கட்டமைக்கப்பட்டிருந்தால், போரை அவ்வளவு எளிதாக மக்கள் மீது திணிக்க முடியாது. அதே போன்று வன்முறைக்கு எதிராக உளவியலும் மனோநிலையும் கட்டமைக்கப்பட்டிருந்தால் வன்முறையை மக்கள் மீது திணிக்க முடியாது.

இன்று ஓர் உளவியல் கட்டமைக்கப்பட்டுள்ளது. செல்வம் உருவாக்கல், பொருளாதார வளர்ச்சி, நாட்டை வளமாக்குதல், வல்லரசாக மாற்றுதல் ஆகிய உளவியலில் மக்கள் வழிநடத்தப்படுகின்றனர். அதே போன்று, சமூகத்தில் மற்றொரு சாராரிடம் ஓர் உளவியல் உருவாக்கப்பட்டுள்ளது. சிறிய அடையாளங்களுக்குள் மக்களைப் பிரித்து திணித்து அதன் வழியாக எதையும் பார்த்துச் செயல்படுவது என்ற உளவியலை உருவாக்கிவிட்டனர். இந்த உளவியல்களால் மக்களின் சமுதாய ஒற்றுமையை, வாழ்வாதாரத்தை, வேலைவாய்ப்பை, அடிப்படை வசதிகளை, அமைதியை, மகிழ்ச்சியை, மனிதாபிமானத்தை இழக்கிறோம். 800 கோடி மக்கள் வாழ்கிற இந்த உலகம், கடின உழைப்பால் பெற்ற செல்வத்தை வைத்து அனைவருக்கும் மரியாதையுடைய, அமைதியான ஒரு மதிக்கத்தக்க வாழ்க்கையை கட்டமைத்துக்கொள்ள வழிவகை செய்ய அரசாங்கங்களால் இயலவில்லை. அதற்கான தலைமை உலகில் இன்று இல்லை.

ஒரு காலத்தில் போரின் அழிவை உணர்ந்த நாட்டின் தலைவர்கள் ஒன்று கூடி உலக நாடுகளுக்கான அமைதிக்கும் மேம்பாட்டுக்கும் அமைப்புகளை உலகளாவிய நிலையில் உருவாக்கினார்கள்.

இன்று இந்த அமைப்புகள் சிதைக்கப்படுவதும், என் நாட்டு மக்களின் மேம்பாடுதான் பிரதானம் என்று உலகத்தின் வளத்தைச் சுரண்டிய நாடுகள் கூறுவதும், நாட்டின் தலைவர்கள் பொருளாதார மேம்பாடு என்ற ஒற்றைக் கண்ணோட்டத்தில் பொருளாதாரத்தை வளர்த்து, முதலாளிகளுக்கு லாபம் ஈட்டித் தந்து மக்களின் அடிப்படை வசதிகளையும், உரிமைகளையும் நிராகரிப்பதும், இனம், ஜாதி, சமயம், மொழி, கலாசாரம் என அடையாளங்களை வைத்து மக்களைப் பிரித்து அரசியல் நடத்தி மக்களின் மேம்பாட்டைக் காவு கொடுத்து வளமான சுயநல வாழ்க்கையில் தோய்ந்து வாழ்வதும் ஓர் அரசியலாக உருவெடுத்துள்ளது.

இதன் விளைவுதான் உலகின் 20 சதவீத மக்கள், 80 சதவீத வளங்களை அனுபவிக்கின்றனர். 80 சதவீத மக்கள் அடிப்படைத் தேவைகளுக்கே போராட வேண்டியுள்ளது.

தேர்தல் அரசியல் மூலம் அதிகாரத்தைப் பிடித்தவர்கள், அதிகாரத்தை பிடிக்க உதவியவர்களைப் பாதுகாப்பதும் அவர்களுடன் பயணித்து அதிகாரத்தைத் தக்க வைப்பதையும் கலாசாரமாகக் கொண்டு செயல்பட்டதன் விளைவு இன்று அரசாங்கம் அனைவருக்குமானது என்ற நிலை போய், அதிகாரத்தைப் பிடிப்பதற்கு ஆதரவை நல்குவோருக்கானது என்ற நிலை வந்துவிட்டது.

(தினமணி)

## இந்தவார ராசிபலன் 13.04.2025 - 19.04.2025

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - பங்குனி 30
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : பிரதமை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் தங்கள் சந்தோஷ தருணங்களை குடும்பத்தாரோடு கழித்து மகிழ்வீர்கள். அதன் காரணமாக குடும்பத்தில் குதூகலம் நிலவும். வீட்டில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் கோலாகலமாக நிறைவேறும். கடைசியில் விருந்து. கேளிக்கைகளில் என மகிழ்ச்சியின் உச்சிக்குச் செல்வீர்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத தன வரவுகள் மூலம் மனதில் மகிழ்ச்சி ஏற்படும். பக்திப் பிரசங்கங்கள் கேட்பதில் ஆர்வம் ஏற்படும். முன்பின் தெரியாதவர்கள் கூட உங்களுக்கு உதவ முன் வருவார்கள். மேடைப் பேச்சாளர்கள் அவர்களின் பேச்சு வன்மையால் வருமானம் அதிகரிக்கும். புதிய வியாபார தொடர்புகள் இலாபம் தரும். உயர் அதிகாரிகளால் பாராட்டப்படும், பதவி உயர்வின் மூலம் பணப்பயன்களை அடைவீர்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து உயரும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். மாணவர்கள் தேர்வு முடிவுகள் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். ஓய்வெடுத்து. உல்லாசமாய்ப் பொழுது போக்கும் விதமாக, நமக்கு எல்லா நாட்களுமே இருப்பதில்லை. அதே போல் இன்பமும் துன்பமும் கலந்தது தான் வாழ்க்கை. எனவே, கஷ்டங்கள் வந்தாலும் கலங் காதீர்கள்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் கணவன், மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். புத்தி சாதுர்யத்தால் வாழ்க்கையில் பொருளாதார நிலை சீராகும். குழந்தைகள் படிப்பு வகையில் செலவுகள் அதிகரிக்கும். எதிர்கால தொழில் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு விரிவாக்கத் திட்டங்களில் முதலீடுகள் செய்வது முன்னேற்றத்தைத் தரும். உறவுகளுடன் சென்று மகான்கள் தரிசனம் செய்து மகிழ்வார்கள். ஆபரணங்கள் அணிவதால் மனமகிழ்ச்சி ஏற்படும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறுவீர்கள். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கு நன்மை ஏற்படும். தொலை தூரம் பயணங்களால் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். சீரான பொருளாதார நிலையில், மனதிற்குப் பிடித்த படி மனை, வண்டி வாகனம் என அனைத்தும் கிடைக்கும். மாணவர்கள் காலத்தை வீணாக்காமல் கருத்துடன் படித்துப் பெற்றோர்களுக்கு பெருமை சேர்க்க வேண்டும். எந்த ஒரு காரியத்தையும் ஒத்திப் போடாமல் உடனுக்குடன் செயல்பட்டால் உன்னத நிலையை அடையலாம். அரசுப் பணிக்கான தேர்வுக ளில் வெற்றி பெற்று, புதிய பதவிக்கான பணி உத்தரவை பெறுவர்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பெண்களின் அறிவுத்திறன் கூடும். பண விஷயங்களில் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் வாக்கு வன்மை ஓங்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். வீடு, மனை ஆகியவை கிடைக்கும்.சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சுபகாரியங்களுக்கு வீடே விழாக்கோலம் பூணும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலை மைப் பதவிகள் தேடி வரும். வீரம் பொங்கும். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். சிலர் பலவகையிலும் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேர லாம். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு மூலம் ஏற்றம் காண்பீர்கள். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். எடுக்கும் முயற்சிகளில் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள். ஆயினும் முயற்சிகள் வெற்றி அடைய அதிக உழைப்பு தேவைப்படும். சிலருக்கு உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும். உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நிலையில், 13வது திருத்த சட்டம் தன்னும் கிடைக்குமா?



ச. வி. கிருபாகரன் (பிரான்ஸ்)

உலக வல்லரசான அமெரிக்கா, பிராந்திய வல்லாரசுக்களான ஐரோப்பிய யூனியன், இந்தியா, போன்ற பல நாடுகளும் இணைந்து, நம் இலங்கைதீவில் - நீதி சமாதானம் சுயகௌரவத்துடன் வாழ்வதற்கான ஓர் அடிக்கல்லை 2012ம் ஆண்டு நாட்டியதை தொடர்ந்து இன்று வரை ஐ.நா.மனித உரிமை சபையின் அமர்வுகளில் மிகவும் அக்கறையாக செயல்படுகின்றனர்.

இவற்றை சகலராலும் புரிந்து கொள்ள முடியாது. விசேடமாக சகலதையும் தீமையானதாக நினைப்பவர்களுக்கு இவற்றின் ஆழத்தை நிட்சயம் அறிய முடியாது. 1948ம் ஆண்டு முதல் நாம் சில சந்தர்பங்களை தவறவிட்டதனால், ஆயிரக்கணக்கான உயிர்களை பறி கொடுத்துள்ளதுடன், பல நூற்றுக்கணக்கானோர் தமது வாழ்வு சொத்துக்கள், மானம், மரியாதை போன்றவற்றை அர்பணித்து சொல்லானத் துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

"சுவரிருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்பது முதுமொழி". எமது மக்கள், எமது நிலம் இருந்தால் தான் நாம் எந்த அரசியல் இலக்கையும் அடைய முயற்சி செய்ய முடியும். ஆகையால் நாம் யாவரும் முதலில் எமது நிலத்தையும் காப்பாற்ற வேண்டும்.

எமது இலக்குகளை சர்வதேசத்தின் துணையுடன் நகர்த்த வேண்டும். இதற்காக எமது வழிகாட்டிகள் கூறியது போன்று, பாதைகளை மாற்றி, விரும்பினால் தரித்தும் நின்று எமது இலக்கை அடைய முயற்சிக்க வேண்டும்.

தாயகத்தில் வாழும் மக்களை மேலும் துன்பங்களை அனுபவிக்கவிடாது, சர்வதேசத்தின் உதவியுடன் கிடைக்கும் அரசியல் தீர்வை, ஓர் இடைகால தீர்வாக கணித்து, எமது நிரந்தர தீர்வை அடைய முடியும். இதற்கு சர்வதேச ரீதியான ஆதரவு உண்டு. ஆகையால் நாம் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு, எமது தாயகம் மக்களை காப்பாற்ற வேண்டும். இவற்றை யாரும் தமது வங்குரோத்து அரசியல் லாபத்திற்கோ, திரிவுபடுத்தும் ஊடகத்திற்கு தீனி போடுவதற்காகவோ, ஆய்வாளர்களென தம்மை காண்பிப்பவர்களின் உப்பு சொப்பற் ஆய்வுகளிற்கு முன்னுருமை கொத்தால், நாம் மேலும் மேலும் பலவீனமவோம்.

உலகில் சுயநிர்ணய உரிமைக்கு போராடும் இனங்களிற்குள், தமிழ் மக்களே பெரும் தொகையான எண்ணிக்கையில் சர்வதேச ரீதியாக புலம் பெயர்ந்து வாழுகின்றனர். ஆனால் எமது இறந்தகால அனுபவத்தின் அடிப்படையில், நாம் இனியும் தனித்து நின்று போராட முடியாது. ஆகையால் இன்று எமக்கு பச்சை விளக்கை காட்டும் உலக, பிராந்திய வல்லாசுக்களான அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றின் உதவியுடன், எமது அரசியல் உரிமைகளை வென்றெடுக்க நாம் தயராக வேண்டும்.

இவ் நிலைபாட்டிற்கு எதிரானவர்கள், எதிர்காலத்தில் நிலத்தில் வாழும் மக்களை, மேலும் படுகொலைகள், இன்னல்களுக்கு ஆளாக்காது எப்படியாக எமது உரிமைகளையோ, சுதந்திரத்தையோ பெற்றுத் தருவார்கள் என்பதை யாதார்த் ரீதியாக மக்களுக்கு விளக்க வேண்டும்.

இன்று எமக்குள் உள்ள விருப்பு வெறுப்புக்கள், பகைகள் தொடர்ந்து எமது தேசியத்தை தினமும் நாசமாக்கி கொண்டிருக்கிறது. இது உண்மை நேர்மை கொண்ட எந்த ஈழத்தமிழனின் உண்மை நோக்கமாக இருக்க முடியாது. நாளுக்கு நாள் நாம் - சந்ததி சந்ததியாக நாம் யாவரும் தெரிந்தோ தெரியாமல் எமது இனத்தை அழிவுப்பாதையில் இட்டுச் செல்கிறோம். நாம் இவற்றை ஓர் முடிவுக்கு கொண்டுவர வேண்டும்.

தினமும், நாம் எமது நிலம், சரித்தரம், கலை கலாச்சாரத்தை பறிகொடுத்து வருகிறோம். நாம் யாவரும் எமது கண்களை திறந்து - எமது மொழி, கலை, கலாச்சாரம், தேசியம், தாயகம் இன்று என்ன நிலையில் இருக்கிறது என்பதை பார்க்க வேண்டும். நாம் இறந்த காலத்தை நிட்சயம் மாற்ற முடியாது. ஆனால் நாம் யாவரும் நிகழ் காலம் எதிர்காலம் போன்றவற்றை வேற்றுமையில் ஒற்றுமை காணும் கட்டத்தில், மாற்ற முடியும். தயவு செய்து இனியும் காலம் தாமதிக்காது, வேற்றுமையில் ஒற்றுமை கண்டு எமது தேசியம், தாயகம் ஆகியவற்றை காப்பாற்ற முன் வருங்கள். வெள்ளம் வந்த பின்னர் அணைகட்டுவதில் எந்த பிரயோசனமும் இல்லை!


அரசியல் ராஜதந்திரம் தெரியாத தமிழ் தலைமைகள், தெற்கு வாழ் அரசியல் தலைவர்களின் அரசியல் ராஜதந்திரத்தை நிலைபாட்டை கண்டு திகைக்க வேண்டிய நிலையில், இன்று திகழ்கிறோம்.

சிங்கள பௌத்தர்களிற்கு கடந்த ஐந்து தசாப்தங்களிற்கு மேலாக, அயல் நாடான இந்தியாவை, சில சம்பவங்களினால் - கண்ணிலும் காட்ட முடியாத நிலையில் இருந்துள்ளார்கள். ஆனால் தற்பொழுது, சிங்கள பௌத்தர்களின் மிக திறமையான அரசியல் ராஜதந்திர அணுகுமுறை மூலமாக யாவற்றையும் மிக திறம்பட மாற்றியுள்ளார்கள்.

முதலாவதாக, ஆரம்பத்தில் தமிழீழ விடுதலை போராட்டத்திற்கான ஆணி வேருக்கு, இந்தியாவின் உதவி இல்லையானால், சிங்கள பௌத்தர்கள், ஆயுத போராட்டத்தை ஆரம்பத்திலேயே அடக்க முயற்சித்திருப்பார்கள்.

உதரணத்திற்கு, 1982ம் ஆண்டு மே மாதம் 19ம் திகதி, தமிழ்நாட்டில் பாண்டி பஜார் என்னும் இடத்தில், தலைவர் பிரபாகரனிற்கும், உமாமகேஸ்வரனிற்கும் இடையில் நடைபெற்ற சூட்டு சம்பவத்தில் இருவரும் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். அவ்வேளையில், சிறிலங்காவின் காவல்துறையின் தலைவராக திரு ருத்திரா ராஜசிங்கம் என்ற தமிழரே கடமையிலிருந்தார். அதேவேளை சிறிலங்காவின் பிரதமர் சிறிமாவோ பண்டாராநாயக்கவிற்கும், இந்தியாவின் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கும் இடையில், மிக நெருங்கிய உறவுகள் இருந்த பொழுதும், இவர்கள் இருவரையும், சிறிலங்காவின் காவல்துறையினருக்கு கையாளிப்பதற்கு, திருமதி இந்திரா காந்தி மறுத்து விட்டார்.

இரண்டவதாக, 1971ம் ஆண்டு ஜே.வி.பி.யின் புரட்சியை இந்தியாவின் உதவியினலேயே அடக்கப்பட்டது.




'கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் எதற்கு?' என்பது போல், இந்தியாவின் பிரதமரை சந்தித்த பின்னர், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், - இலங்கை இந்திய உடன்படிக்கை, மற்றும் 13வது திருத்த சட்டத்தில் உள்ள சில நல்ல விடயங்களும் பற்றி திருவாய் மலர்ந்துள்ளது வியப்பிற்குரிய விடயம்.

மூன்றவதாக, வடமராட்சி நடவடிக்கை என்றும் அழைக்கப்படும் ஆபரேஷன் லிபரேஷன் என்பது, யாழ்ப்பாண தீபகற்பத்தில் உள்ள வடமராட்சி பிரதேசத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து மீண்டும் கைப்பற்றுவதற்காக இலங்கை ஆயுதப் படைகளால் 1987 மே மற்றும் யூன் மாதங்களில் மேற்கொள்ளப்பட்டது. இவ் வேளையில், இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்ட இடையூறுகளினால், சிறிலங்கா மிக எச்சரிக்கையாக காலம் கடத்தினர்.

இதனை தொடர்ந்து, 1987 ஜூன் 4 ஆம் தேதி, இந்திய விமானப்படை யாழ்ப்பாண நகரத்தின் மீது பொருட்களை வான்வழியாக வீசுவதற்காக மேற்கொண்ட பூமாலை என்று அழைக்கப்படும் ஆபரேஷன் பூமாலை என்ற குறியீட்டினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை, சிறிலங்காவை விழிக்க வைத்துள்ளது.

அடுத்து, 1987ம் ஆண்டு யூலை மாதம் 29ம் திகதி இலங்கை-இந்தியா ஒப்பத்தத்தின் விளைவாக, உருவாக்கப்பட்ட பதின் மூன்றவது திருத்த சட்டம். இவ் ஒப்பத்தந்தை கைச்சாத்திடுவதற்காக சிறிலங்காவின் தலைநகர் கொழும்பிற்கு, இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியவர்கள் வருகை தந்த வேளையில், அணிவகுப்பில் நின்ற ஓர் கடற்படை சிப்பாயினால் தாக்கப்பட்டவை போன்று இன்னும் பல விடயங்களை அடுக்கி கொண்டே போகலாம்.

இதே வேளை சிங்கள பௌத்தர்களை பொறுத்த வரையில், கௌதம புத்தர் பிறந்து வாழ்ந்த நாடு இந்தியா, ஆனால் இந்தியாவில் பௌத்த சமயத்தின் நிலை, சிங்கள பௌத்தர்களை மிகவும் சினம் கொள்ள வைத்துள்ளது. புத்தர் பிறந்து வாழ்ந்த இந்தியாவில், 8.5 கோடி பௌத்தர்கள் மட்டுமே வாழ்கின்றனர். இது இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 0.7 வீதம் ஆகும். இவை போன்ற வேறு பல காரணிகளினால், சிங்கள பௌத்தர்கள, இந்தியாவை ஓர் எதிரி நாடாக கருதியே காலங்கள்.

இப்படியான காரணிகள் உள்ள நிலையிலும், தமது அரசியல் ராஜதந்திர மதிநுட்பம் மூலம், தமிழ் மக்களிற்கு மிக நெருங்கிய அயல் நாடு மட்டுமல்லாது, தமிழ் மக்களின் தொப்புள் கொடி உறவுகள் கொண்ட இந்தியாவை, தமக்கு சார்பாக மாற்றி, ஈழத்தமிழர்களாகிய எம்மை, இந்தியாவின் எதிரியாக உருவெடுக்க வைத்தார்கள் என்பதை, நாம் ஆராய கடமைப்பட்டுள்ளோம்.

ஈழத்தமிழர்களாகிய எமக்கு, மதிநுட்ப ராஜதந்திர அடிப்படையில், நிலைமைகளை அணுகும் திறமைகள் கிடையாது. 1987ம் ஆண்டு யூலை மாதம் 29ம் திகதி இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியை கொலை செய்யும் நோக்கத்துடன், அணிவகுப்பில் தனது துப்பாக்கியால் தாக்கிய கடற்படை சிப்பாய் இன்று எங்கு? பட்டகலில் நடந்த இச் சம்பவத்தின் கண்கட்ட சாட்சிகளாக - சிறிலங்காவின் ஜனதிபதி, இந்திய பிரதமரின் துணைவியார் போன்று சில முக்கியபுள்ளிகள் விளங்கியும், ராஜீவ் காந்தியை கொல்வதற்கு முயற்சித்த கடற்படை சிப்பாய், இன்றும் கொழும்பு மாநகரில் சுதந்திரமாக வலம் வருகிறார்.

ஆனால் நாங்களோ, கண்கண்ட சாட்சிகள் அற்ற நிலையிலும், ஆயுள் காலம், மரண தண்டனையென இந்தியாவில் எதிர்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

சுருக்கமாக கூறுவதனால் - எமது தொப்புள் கொடி உறவு, இந்தியா எமது தாய் நாடு, என்ற வீர வசனங்கள் எல்லாம் வலுவிளப்பதற்கு, நாமே காரணியாகியுள்ளோம்.

யுத்தம் முடிவதற்கு முன்பு, அதாவது 2008ம் ஆண்டு நவம்பர் 27ம் திகதி மாவீர் நாள் உரையில், "இந்தக் கால மாற்றத்திகேற்ப, இந்தியப் பேரரசுடனான அறுந்து போன எமது உறவுகளை நாம் மீளவும் புதுப்பித்துக் கொள்ள விரும்புகிறோம்" என தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரன் கூறியதை, இன்று வரை எத்தனை பேர் நடைமுறை படுத்தியுள்ளார்கள்?

1987ம் ஆண்டு இலங்கை-இந்தியா ஒப்பந்தத்தை முற்று முழுதாக எதிர்த்த ஜே.வி.பி. ஒப்பந்தந்தை தொடர்ந்து, இந்தியாவின் மாபெரும் எதிரிகளாக காணப்பட்டனர். இந்தியாவின் இறக்குமதி பொருட்களான 'மைசூர் பருப்பிற்கு' சிவப்பு பருப்பு எனவும், 'பம்பாய் வெங்கயத்திற்கு' பெரிய வெங்காயமென அன்று பெயரிட்ட ஜே.வி.பி, இன்று தமது அரசியல் நிலைபாட்டை மாற்றி, இந்தியாவின் உற்ற நண்பராக உலகிற்கு காண்பிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இந்தியாவின் நம்பிக்கைகுரிய நபர்களாக திகழ்வது மட்டுமல்லாமல், இருவருக்கும் இடையில் மிக சக்திவாய்ந்த பரஸ்பர ஒப்பந்தங்களும் கைச்சாத்தாகியுள்ளன. இது ஈழத்தழிழர்களுக்கு கிடைத்த அரசியல் ராஜதந்திர தோல்வியாகும்.

இவை எல்லாவற்றிற்கும் வித்திட்டவர்கள், ஒரு நாடு இரு தேசம், ஒற்றையாட்சிக்கு வெளியில் தீர்வு போன்ற மிலேச்ச தனமான கதைகள் கங்காரியங்கள் மட்டுமல்லாது, இந்தியாவை பற்றி மிக மோசமாக மக்களிற்கு விசமூட்டி, எம்மை இந்தியாவிடமிருந்து அந்நியபடுத்தியுள்ளார்கள்.

கடந்த வாரம் தமிழ் பாரளுமன்ற உறுப்பினர்களும், வேறு சிலருமாக இந்தியா பிரதமர் திரு நரேந்திரா மோடியை கொழும்பில் சந்தித்துள்ளனர். இவர்கள் எதற்காக மோடியை சந்தித்தார்களென்பது யாருக்கும் விளங்காத புதிரா உள்ளது! காரணம் இவர்கள் யாரிடமும் ஒன்றுபட்ட கருத்து அங்கு காணப்படவில்லை. இவர்கள் பேசியவை ஏதும், திரு மோடிக்கும் அவரது அதிகாரிகளிற்கு உருப்படியாக புரிந்ததோ என்பது சந்தேகம். காரணம் ஒருவர் சமஸ்டி, இன்னொரு கூட்டுறவு சமஸ்டி, இன்னொருவர் ஒற்றையாட்சிக்கு வெளியில் தீர்வு, எல்லாமே சாம்பாறாகியுள்ளது.

இவற்றில் வேடிக்கை என்னவெனில், திரு நரேந்திரா மோடியை சந்தித்துள்ள பெயர்வழிகள், வழமை போல் பிரிந்து நின்று, தமக்கு சார்பான ஊடகங்களில் "கீரை கடைக்கு எதிர்கடை போட்டார்கள்". இவற்றில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடகங்களில் பாவித்துள்ள சொற்பதங்களை கேட்கும் பொழுது, தமிழ் தேசிய மக்கள் முன்னனி-தமிழ் காங்கிரஸ், பிராந்திய வல்லாரசான இந்தியாவிற்கு மேலானதா என எண்ண தோன்றுகிறது. காரணம், ஊடகம் ஒன்றில் கருத்து தெரிவித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியது என்னவெனில், - "நாங்கள் இந்தியாவின் பங்களிப்பை அங்கீகரிப்பதாகவும், ஆதரவு ஒத்துழைப்பு தருவதாகவும் திரு மோடிக்கு கூறியுள்ளராம்"! இப்படியான கதைகளினால் தான், இவர்களிற்கு அரசியல் ராஜதந்திரம் தெரியாதவர்களென தொடர்ந்து கூறி வருகிறேன்.

'கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் எதற்கு?' என்பது போல், இந்தியாவின் பிரதமரை சந்தித்த பின்னர், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், - இலங்கை இந்திய உடன்படிக்கை, மற்றும் 13வது திருத்த சட்டத்தில் உள்ள சில நல்ல விடயங்களும் பற்றி திருவாய் மலர்ந்துள்ளது வியப்பிற்குரிய விடயம். இவற்றை இவரும் இவரது சகக்களும், யுத்தம் முடிவுற்றதை தொடர்ந்து, 2009ம் ஆண்டு மே மாதத்தின் மாதத்தின் பின்னர் கூறியிருந்தால், பிரிவுகளை தடுத்து, புரிந்துணர்வுகளை பெருக்கியிருக்க முடியும்.

இங்கு முக்கிய கேள்வி என்னவெனில், 2009ம் ஆண்டு மே மாதத்தின் பின்னர், இலங்கை இந்திய ஒப்பந்தம், 13வது திருத்த சட்டத்தை பற்றி, ஒழிப்பு மறைப்பின்றி வெளிப்படையாக கதைத்த எனக்கு, 'றோ பட்டம்' சூட்டிய, முன்னாள் தேசிய பட்டியல் பாரளுமன்ற உறுப்பினரான செல்வராஜா கஜேந்திரன், கடந்த வாரம் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கும் "றோ" பட்டத் சூட்டியுள்ளரோ தெரியவில்லை! (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல நாடுகளுடனும் நட்புறவு, ஆனால், இந்தியாவுக்கு முதன்மையான இடம் !



கலாநிதி ஜெகான் பெரேரா

இந்தி பிரதமர் நரேந்திர மோடி இலங்கையில் இருந்த மூன்று நாட்களும் (ஏப்ரில் 4 - 6) அவரை வரவேற்று கௌரவிப்பதற்கு அரசாங்கம் அதன் சக்திக்கு உட்பட்ட சகல நடவடிக்கைகளையும் எடுத்தது. இலங்கை விருந்தோம்பலுக்கு பெயர்போனது. அரசாங்கம் அதன் விருந்தோம்பல் பற்றிய எதிர்பார்ப்புக்கள் எல்லாவற்றையும் விஞ்சிவிட்டது. விமான நிலையத்தில் ஆறு அமைச்சர்களுடன் சிறுவர்களும் பிரதமர் மோடியை வரவேற்றார்கள். பிரதமரை புகழ்ந்துரைக்கும் வாசகங்கள் கொண்ட மிகப்பெரிய பதாதை ஒன்றும் அங்கு காணப்பட்டது.

பிரதமர் மோடியின் நட்புறவையும் ஒத்துழைப்பையும் பாராட்டி ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க அவருக்கு நாட்டின் அதியுயர் 'சிறிலங்கா மித்ர விபூஷண' விருதை வழங்கினார். மூன்று வருடங்களுக்கு முன்னர் பொருளாதார அனர்த்தத்தில் இருந்து இலங்கையை பாதுகாத்ததில் மோடி தலைமையிலான இந்திய அரசாங்கம் வகித்த பாத்திரத்துக்காக அவருக்கு பெரும் கௌரவம் கொடுப்பது தகும். அந்த பாத்திரம் வெறுமனே மனிதாபிமானம் அல்ல. பிரதமர் மோடியின் வெளியுறவு கொள்கையின் ஒரு மைல்கல்லாக இருக்கும் 'அயலகத்துக்கு முதலிடம்' என்ற ஒரு கோட்பாட்டில் வேரூன்றிய பிராந்திய தலைமைத்துவத்தின் கூர்மதியுடனான ஒரு வெளிப்பாடாகும்.

தெற்காசியாவில் உறுதிப்பாட்டை ஏற்படுத்தும் நாடு என்ற வகையில் இந்தியாவுக்கு ஒரு முக்கியமான பாத்திரம் இருக்கிறது. அதுவும் குறிப்பாக, பிராந்தியத்தின் அயல் நாடுகள் பொருளாதார அல்லது அரசியல் நெருக்குதலின் கீழ் தடுமாறும்போது உதவுவதில் அந்த பாத்திரம் மிகவும் முக்கியமானது. அது விடயத்தில் இந்தியா அதன் முழு ஆற்றலையும் இன்னமும் வெளிப்படுத்தவில்லை. பாகிஸ்தானுடனும் பங்களாதேஷுடனும் இந்தியாவின் உறவுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது இதை புரிந்துகொள்ள முடியும். ஆனால், இலங்கை விடயத்தில் இந்தியா உண்மையில் அருச்செயல் செய்திருக்கிறது. இந்த நேரத்தில் பிரதமர் மோடியின் இலங்கை விஜயம் பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்களுக்கு அப்பால் அடையாளபூர்வமான கனதியைக் கொண்டிருக்கிறது.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பிறகு இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கின்ற முதல் வெளிநாட்டுத் தலைவர் பிரதமர் மோடியே என்று ஜனாதிபதி திசாநாயக்க தனது வரவேற்புரையில் குறிப்பிட்டார். ஆட்சி மாற்றத்துக்கு பிறகு இலங்கைக்கு முதலில் விஜயம் செய்ததன் மூலமாக அவர் புதிதாக தெரிவு செய்யப்பட்ட தலைவர்களுக்கு சர்வதேச முக்கியத்துவத்தை கொடுத்திருக்கிறார். மோடி அவ்வாறு செய்தது ஜனாதிபதி திசாநாயக்கவின் அரசாங்கத்துக்கு இந்தியாவின் அங்கீகாரத்தை குறிப்பால் தெரியப்படுத்தியிருக்கிறார்.

பாரம்பரியமான அரசியல் உயர்வர்க்கப் பின்புலத்தைக் கொண்டிராத ஒரு தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி திசாநாயக்கவுக்கு அந்த அங்கீகாரம் விசேடமான பெறுமதியுடையதாகும். பாரம்பரியமான ஆளும் வர்க்கத்துக்கு வெளியில் இருந்து அரசியலுக்கு தானும் மோடியும் வந்தவர்கள் என்பதால் இருவருக்கும் பொதுவான அரசியல் மூலமுதல் இருக்கிறது என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அதன் மூலமாக ஒரு பரந்தளவிலான தத்துவார்த்த ஒத்தியல்வை குறிக்கும் பாலம் ஒன்றை தனக்கும் மோடிக்கும் இடையில் ஜனாதிபதி அமைத்திருகிறார்.

பெட்டிக்குள் இருந்த 'சிறிலங்கா மித்ர விபூஷண' பதக்கத்தை பிரதமர் மோடிக்கு முதலில் காண்பித்து பிறகு அதை வெளியில் எடுத்து அவரின் கழுத்தில் அணிவித்த போது ஜனாதிபதி திசாநாயக்கவிடம் இருக்கும் மனிதநேய உணர்வு வெளிப்பட்டது. இரு தலைவர்களும் தங்களது கைகளை இறுகப்பற்றி ஒன்றாக உயர்த்திப் பிடித்தபோது அவர்கள் தங்களுக்கு இடையிலான தோழமையையும் ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தினார்கள். அது நீண்டகால அனுபவம் கொண்ட ஒரு மூத்த தலைவருக்கும் தேசிய தலைமைத்துவத்துக்கான பயணத்தை அண்மையில் ஆரம்பித்த ஒரு இளம் தலைவருக்கும் இடையிலான தோழமைச் செய்தியைக் கூறியது.

இந்திய விரோதக் கோட்பாட்டை ஒரு பிரதான அம்சமாகக் கொண்டிருந்த ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) முதலாவது ஆயுதக்கிளர்ச்சி 54 வருடங்களுக்கு முன்னர் தொடக்கிய தினமான ஏப்ரில் 5 ஆம் திகதி பிரதமர் மோடிக்கு ஜே.வி.பி.யின் இன்றைய தலைவரான ஜனாதிபதி திசாநாயக்க விருதை வழங்கிக் கௌரவித்தது கவனிக்கத்தக்கது. (பிறகு 1987 ஆம் ஆண்டில் ஜே.வி.பி. முன்னெடுத்த ஆயுதக்கிளர்ச்சியும் இந்திய விரோத கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாகவே இருந்தது) அவ்வாறு அந்த விருதை வழங்கியதன் மூலமாக திசாநாயக்க தன்னை அரசியல் வேர்களுக்கு அப்பால் சென்று தேசிய மட்டத்தில் இருந்து சர்வதேச மட்டத்துக்கு உயருகின்ற உண்மையான ஒரு இலங்கைத் தலைவராக தன்னை நிரூபித்தார்.

இந்திய பிரதமரின் விஜயத்தின்போது கொழும்பில் கைச்சாத்திடப்பட்ட ஏழு உடன்படிக்கைகளில் ஆறு உடன்படிக்கைகள் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பானவை. அவை புதுப்பிக்கத்தக்க சக்தி செயற்திட்டங்கள் மற்றும் டிஜிட்டல் ஆட்சிமுறைத்தளம் தொடக்கம் பெருந்தோட்டத் துறையில் உட்கட்டமைப்பு முதலீடுகள் வரையானவை. இந்திய வம்சாவளி தமிழ் மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்தல், 5000 மதத்தலங்களுக்கு சூரிய சக்தி மூலமான மின்சாரத்தை வழங்குதல் தொடர்பான உடன்படிக்கைகள் அவற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கவை.



**நண்பர்கள் மத்தியில் எப்போதுமே முதன்மையானவர் என்று ஒருவர் இருக்க வேண்டும். வரலாறு, கலாசாரம், மதம், புவியியல் மற்றும் மூலோபய தர்க்கம் ஆகிய காரணங்களுக்காக இலங்கையைப் பொறுத்தவரை அந்த முதன்மையான நட்புநாடு இந்தியாவாகவே இருக்க முடியும்.**

அடையாள அரசியல் உணர்வுகளுடன் அபிவிருத்தி உதவியை கலப்பவையாக அமையும் இந்த இரு செயற்திட்டங்களும் அபிவிருத்தி இராஜதந்திரத்தை மூலோபாய நோக்கங்களுக்கு பயன்படுத்தும் இந்தியாவின் திட்டங்களுக்கு இசைவானவையாகும். கடனில் தங்கியிருக்கும் போக்கை அதிகரிப்பதாக அடிக்கடி விமர்சிக்கப்படும் உதவி மற்றும் உட்கட்டமைப்பு திட்டங்கள் தொடர்பிலான சீனாவின் அணுகுமுறைகளைப் போலன்றி இந்தியாவின் இந்த வகையான திட்டங்கள் கூட்டுப்பங்காண்மை, கலாசார நெருக்கம் மற்றும் நீண்டகால அடிப்படையில் ஆற்றல் மேம்பாட்டின் மீது கவனத்தைச் செலுத்துபவையாக இருக்கின்றன.

ஏழாவது உடன்படிக்கை இரு நாடுகளுக்குமே நீண்டகால அக்கறையாக இருந்துவரும் பாதுகாப்பு மற்றும் தேசிய பந்தோபஸ்துடன் தொடர்புடையது. ஏனைய ஆறு உடன்படிக்கைகளின் சாராம்சங்களும் பிரதமர் மோடியின் விஜயத்தின்போது வெளியிடப்பட்ட போதிலும், இந்த ஏழாவது உடன்படிக்கை உட்பட எந்தவொரு உடன்படிக்கையும் இரு அரசாங்கங்களின் மட்டத்துக்கு வெளியே கலந்தாலோசிக்கப்படவில்லை.

பொருளாதார உடன்படிக்கைகள் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் பொதுவெளியில் அக்கறைக்குரியவையாக இருந்து வந்திருக்கின்றன. குறிப்பாக, டிஜிட்டல் திட்டம் ஊடாக இலங்கை குடிமக்களின் தனிப்பட்ட தகவல்களை இந்தியா பெற்றுக்கொள்ளக்கூடிய சாத்தியம் பற்றிய அக்கறையைக் கூறலாம். ஆனால், பாதுகாப்பு உடன்படிக்கை பற்றி பெரிதாக எதுவும் தெரியாது. இரு நாடுகளின் தேவைகளையும் பாதுகாப்பு உடன்படிக்கை எந்தளவுக்கு நிறைவேற்றும் என்பதைப் பொறுத்து அது பரஸ்பரம் பயன்தரக்கூடிய மாற்றம் குறித்து இடம்பெறக் கூடிய பேச்சுவார்த்தைகளுக்கு அத்திபாரமாக அமையக் கூடிய நம்பிக்கையை கட்டியெழுப்ப உதவும்.

கடந்த காலத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நம்பிக்கைப் பற்றாக்குறை ஒன்று இருந்து வந்தது. விடுதலை புலிகளுடனும் மற்றைய தமிழ் தீவிரவாத இயக்கங்களுடனுமான போர்க்காலத்தில் நாடு எதிர்நோக்கிய இடர்பாடான பாதுகாப்பு நிலைவரத்தை இலங்கையர்கள் மனதில் வைத்திருக்கிறார்கள். நாட்டின் சில பகுதிகளை தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விடுதலை புலிகள் செய்த நிருவாகம் நாட்டின் ஆட்புல ஒருமைப்பாட்டுக்கு பெரும் ஆபத்தை தோற்றுவித்திருந்தது.

இலங்கை அரசாங்கத்தின் சம்மதம் இன்றி இலங்கையின் வான்பரப்பிற்கு இராணுவ விமானங்களை இந்தியா அனுப்பிய காலப்பகுதியாகவும் ( ஜூன் 1987 ) அது அமைந்தது. தனது அந்த செயலை ஒரு மனிதாபிமான நடவடிக்கை என்று இந்தியா நியாயப்படுத்திய போதிலும், பெருமளவில் இந்தியாவின் இராணுவத் தலையீட்டுக்கான சாத்தியம் குறத்து அச்சம் நிலவியது. அதை தொடர்ந்து [illegible] 1987 ஜூலை இந்திய -- இலங்கை சமாதான உடன்படிக்கை இலங்கை அரசாங்கத்தின் இணக்கத்துடன் ஒரு அமைதி காக்கும் படையாக இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பப்படுவதற்கு வழிவகுத்தது.

இலங்கை இனநெருக்கடியில் இந்திய தலையீட்டின் வரலாறு இந்தியாவுக்கு ஒரு சரிசம எதிரிடையாக செயல்பட வைப்பதற்கு ஏனைய பெரிய வல்லரசுகளை நோக்குவதற்கு இலங்கைக்கு ஊக்கத்தைக் கொடுத்தது. மிகவும் அண்மைய வருடங்களில் ஆராய்ச்சி என்ற பெயரில் இலங்கை கடற்பரப்புக்கு சீனாவில் இருந்து கடற்படைக் கப்பல்கள் வருகை தந்தது தொடர்பில் இந்தியா விசனத்தை வெளிப்படுத்தி வந்திருக்கிறது. சீனக்கப்பல்கள் செய்வதாகக் கூறப்படும் ஆராய்ச்சிகள் இந்தியவுக்கு எதிராகப் பயன்படுத்தப்படக் கூடும் என்பது இந்தியாவின் விசனம். சீனாவுடனான இலங்கையின் ஊடாட்டங்கள் குறிப்பாக, சிவில் - இராணுவ இரட்டை நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படக்கூடிய சாத்தியங்களைக் கொண்டவையாக தோன்றும் அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டம் போன்றவை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கசப்புணர்வை ஏற்படுத்தின.

அதிகரித்துவரும் சீனாவின் உலகளாவிய செல்வாக்கையும் மண்டலமும் பாதையும் செயற்திட்டத்தின் ஊடாக செல்வாக்கை வெளிக்காட்டுவதற்கான சீனாவின் அபிலாசையையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது இலங்கையின் புவியியல் அமைவிடம் அதை இந்துசமுத்திரத்தில் ஒரு முக்கிய மையமாக்குகிறது. இந்தியாவும் இலங்கையும் தற்போது கைச்சாத்திட்டிருக்கும் பாதுகாப்பு உடன்படிக்கை கடந்த காலத்தின் இந்த அச்சங்களையும் சந்தேகங்களையும் தணித்து விரைவில் முடிவுக்கு கொண்டுவரும்.

சகல நாடுகளுடனும் நட்புறவு என்பதே ஜனாதிபதி திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். 'சகலருடனும் நட்புறவு, எவருடனும் பகைமை இல்லை' என்ற கோட்பாடு ஒன்றும் புதியதல்ல, ஆனால், முக்கியமான வல்லரசு நாடுகளுக்கு இடையில் தீவிரமடைந்திருக்கும் உலகளாவிய போட்டாபோட்டிக்கு மத்தியில் இன்று இடர்பாடுகள் அதிகமானவையாக இருக்கின்றன. புவியியல் மற்றும் வரலாற்று அடிப்படையில் இந்தியா எப்போதுமே இலங்கையின் முதலாவதும் மிகவும் முக்கியமானதுமான பங்காளியாக விளங்கும்.

2022 ஆம் ஆண்டில் இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணி தீர்ந்துபோனபோது சீனாவோ அல்லது மேற்குலக நாடுகளோ அல்ல, இந்தியாவே அவசர பொருளாதார உதவியை வழங்குவதற்கு ஓடோடி வந்தது. அந்த ஆதரவு தொடர் கடனாகவும் நேரடி உதவியாகவும் 400 கோடி டொலர்களாக விரைவாகவும் குறைந்தபட்ச நிபந்தனையுடனும் வழங்கப்பட்டது. பிராந்திய நெருக்கத்தினால் (சர்வதேச பல்தரப்பு நிறுவனங்கள் வழங்கக் கூடிய உதவிகளையும் விட) எந்தளவுக்கு விரைவான உதவியை கொண்டுவரமுடியும் என்பதை அது வெளிக்காட்டியது.

உலகம் இப்போது மிகவும் கடுகடுப்பானதாகவும் நாடுகளிடையேயான உறவுகள் வெளிப்படையாக சுயநலம் கொண்டதாகவும் மாறிவிட்டது. அசைக்கமுடியாத பிணைப்புக்களை கொண்டவை என்று நம்பப்பட்ட நாடுகளிடையிலான உறவுகள் கூட இன்று அவ்வாறு தான் மாறிவிட்டன. இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதிச் சந்தைகளாக அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமுமே விளங்குகின்றன. ஜப்பான் மற்றும் சீனாவிடமிருந்து பெருமளவில் பொருளாதார உதவிகளையும் இலங்கை பெற்றிருக்கிறது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக, சீனாவிடமிருந்து பெற்ற கடனுதவிகள் முன்னைய அரசாங்கங்களினால் மக்களுக்கு பெரிதும் பயன்தராத பாரிய உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டன.

பெருமளவு வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டிய சுமைக்கு மத்தியில் 2022 ஆம் ஆண்டில் வங்குரோத்து நிலையை அடைந்த இலங்கைக்கு பொருளாதார வளங்களும் உலகம் பூராவுமிருந்து சந்தை வாய்ப்புக்களும் தேவைப்படுகின்றன. இந்தியாவுடனான நெருக்கம் அதனுடன் மாத்திரம் பிரத்தியேகமான ஒரு உறவுமுறையாக அர்த்தப்படவேண்டிய தேவை இல்லை என்பதை ஜனாதிபதி திசாநாயக்கவின் அரசாங்கம் விளங்கிக் கொள்ளும். பல்துருவ உலகு ஒன்றில் சகல நாடுகளுடனுமான நட்புறவு ( வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் கூட ) என்பது ஒரு தகுதியும் அவசியமுமாகும்.

ஆனால், நண்பர்கள் மத்தியில் எப்போதுமே முதன்மையானவர் என்று ஒருவர் இருக்க வேண்டும். வரலாறு, கலாசாரம், மதம், புவியியல் மற்றும் மூலோபய தர்க்கம் ஆகிய காரணங்களுக்காக இலங்கையைப் பொறுத்தவரை அந்த முதன்மையான நட்புநாடு இந்தியாவாகவே இருக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சிகள் இல்லாத ஆட்சியமைப்பை உருவாக்குவதுதான் இறுதி இலக்கா?

**பனங்காட்டான்**

எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் அது திருவிழாக் கோலமாக கொண்டாடப்படுவது வழக்கம். ஆனால், இப்போது உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் காலம் அவ்வாறாக அன்றி சோபை இழந்து காணப்படுகிறது. குறிப்பாகச் சொல்வதானால் தங்கள் வேட்பாளர்கள் யார், எந்தெந்த சபைகளுக்கு தேர்தல் நடைபெறுகிறது என்பது வாக்காளர்களுக்குத் தெரியாதது போன்று நிலைமை காணப்படுகிறது.

இதனைவிட, யார் எந்தச் சபைக்கு போட்டியிடுகிறார் என்பது தெரியாது வாக்காளர்கள் தடுமாறுகின்றனர். இதே தடுமாற்றம் தேர்தல் திணைக்களத்திலும் காணப்படுகிறது. இடைநிறுத்தப்பட்ட வேட்புமனுக்களை ஏற்றுக்கொண்டு தேர்தலை நடத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகள் எந்தெந்த சபைகளை உள்ளடக்கியுள்ளது என்பது புரியாத திண்டாட்டம் தேர்தல் திணைக்களத்துக்கு.

இந்தக் காரணங்களால், திட்டமிட்டவாறு உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நடைபெறுமா என்றவாறு சில ஊடகங்கள் செய்திகளை வெளியிடுகின்றன. புதிய தேர்தல் நடைமுறைகளே இத்தனை குழப்பங்களுக்கும் காரணம் என தேர்தலில் போட்டியிடும் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் குற்றம் சாட்டுகின்றன. நிலைமையை உற்று நோக்கின் இப்போது தேர்தல் இடம்பெறுவதை எவருமே விரும்பவில்லை போல் தெரிகிறது.

இது தொடர்பாக தமிழ்க் கட்சி ஒன்றின் முக்கிய பிரமுகர் ஒருவருடன் தொடர்பு கொண்டபோது அவர் தெரிவித்த தகவல்கள் களநிலைமையை அப்பட்டமாகத் தெரியத்தந்தது. தங்கள் கட்சிக்கு அபேட்சகர்களைக் கண்டுபிடிப்பதே பெரும் சிரமமாக இருந்ததாகவும், ஒரு சிலர் இரண்டு மூன்று அணிகளில் தங்கள் பெயர்களை வழங்கியதாகவும் சொன்னதுடன் மட்டும் அவர் நிறுத்தவில்லை. இம்முறை தங்கள் கட்சி எந்தச் சபையையும் கைப்பற்றும் என தாம் நினைக்கவில்லை என்றும், எல்லாம் இயற்கையின் நியதியாகவே இடம்பெறும் என்றும் இயற்கையின் மேல் பாரத்தைச் சுமத்திவிட்டு அமைதி கொண்டார். இவரது கருத்தை பார்க்கையில் நிலைமை மிகப் பரிதாபமாக இருப்பது புரிகிறது.


தெற்கில் தேர்தல் பரபரப்பைவிட ஊழல், மோசடி, மனித உரிமை மீறல்கள் சம்பந்தப்பட்டவர்கள் எனப்படுவோர் மீதான விசாரணைகளும் கருத்துப் பரிமாறல்களும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மையப்படுத்திய பட்டலந்த வதைமுகாம் சமாசாரம் எதிர்பார்த்ததை விட மேலும் விரிவடைவது தெரிகிறது. அநுர குமர அரசாங்கம் இவ்விடயத்தை இயலுமானவரை விசாலமாக்கி ரணிலுக்கு ஒரு பாடம் கற்பிக்க விரும்புவது போல அசைவுகள் காணப்படுகின்றன. இதற்கான ஓர் ஆயுதமாக இது தொடர்பான முன்னைய விசாரணைக் கமிஷன் அறிக்கை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மகிந்த ராஜபக்ச குடும்பத்தினரை பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகள் ஊடாக கேள்விக்குறியில் நிறுத்தியுள்ள அநுர குமர தரப்பு, இப்போது ரணிலையும் இன்னொரு குற்றச்சாட்டில் கூண்டில் நிறுத்தும் வேலையை ஆரம்பித்துள்ளது. மகிந்த தரப்பும் ரணில் தரப்பும் முன்னொரு காலத்தில் ஜே.வி.பி. அணியினருடன் தங்கள் தங்கள் தேவைகளுக்காக நெருங்கிய நட்பில் இருந்தவர்கள் என்பதை இப்போது பலரும் மறந்திருக்கலாம். அதேபோன்று அநுரவின் ஜே.வி.பி.யினர் இந்தியாவுடன் பரம விரோதிகளாக இருந்ததையும் மறந்துவிட முடியாது.

பல விடயங்களில் இந்தியாவுக்கு தாங்கள் எதிர்ப்புத் தெரிவித்து வந்ததாகவும், இந்தியா அதனை மறந்து தற்போது தேசிய மக்கள் சக்தி அரசுக்கு ஆதரவளித்து வருவதாகவும், இதனால் தாங்கள் இன்று இந்தியாவுக்கு பூரண ஆதரவு என்று ஜே.வி.பி.யின் பொதுச்செயலா







> 1971லும் 1987லும் ஆட்சியாளர்களுக்கு எதிராக மேற்கொண்ட புரட்சியில் தோல்வி கண்டு, தேர்தல்கள் ஊடாக நாடாளுமன்றம் சென்று அமைச்சர் பதவிகளை வகித்தும் வெறுப்புக் கண்டு இறுதியில் ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றி பெற்று அரியாசனம் ஏறியிருக்கும் தேசிய மக்கள் சக்தி எனும் ஜே.வி.பி. ஆரம்பித்திருக்கும் முன்னாள் அரசியல் தலைமைகள் மீதான விசாரணைகளின் உள்நோக்கம் பல மட்டங்களில் சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

ளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். இவ்விடயத்தில் இந்தியாவா அல்லது ஜே.வி.பி.யா மாபெரும் நடிகர் என்பது தெரியவில்லை. அரசியலில் நிரந்தர நண்பரும் இல்லை எதிரியும் இல்லை என்று இதனைப் பார்ப்பதா என்றும் புரியவில்லை.

இலங்கை வரலாற்றில் ஆயுதப்புரட்சி என்பது 1971 ஏப்ரல் 5ம் திகதி சேகுவேர என அழைக்கப்பட்ட ஜே.வி.பி.யினரால் நடத்தப்பட்டது. ஒரே இரவில் 76 பொலிஸ் நிலையங்களை தாக்கி ஆயுதங்களைக் கைப்பற்றிய இவர்கள் அன்றைய சிறீமாவோ பண்டாரநாயக்கவை உயிருடன் அல்லது உயிரற்று பிடித்து ஆட்சியைக் கைப்பற்றுவதை முனைப்பாகக் கொண்டு இயங்கினர். ஆனால், அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி சிறீமாவோவின் வேண்டுகோளை ஏற்று ஒரு டசின் வரையான இராணுவ ஹெலிகொப்டர்களை அனுப்பி நாற்பதினாயிரம் வரையான ஜே.வி.பி.யினரை தென்னிலங்கைக் காடுகளில் கொன்றொழித்ததாக வரலாறு பதிவு செய்துள்ளது.

அன்றிலிருந்து ஜே.வி.பி. இந்திய எதிர்ப்புக் கொள்கையை தனது நிரந்தர கொள்கையாக அமைத்துக் கொண்டது. அப்போது ஜே.வி.பி.யின் தலைவராக இருந்த றோகண விஜேவீரா உட்பட நூற்றுக்கணக்கானவர்களை கைது செய்த சிறீமாவோ அரசு குற்ற விசாரணை கமிஷன் ஊடாக நீண்டகால சிறைக்கு அனுப்பியது. 1977 தேர்தலில் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஜே.வி.பி.யினருக்கு மன்னிப்பு வழங்கி சிறையில் இருந்த அனைவரையும் விடுதலை செய்தார். அதேசமயம், சிறீமாவே பண்டாரநாயக்கவின் குடியுரிமையை ரத்துச் செய்து அவர் தேர்தலில் போட்டியிடுவதை தடை செய்தார்.

1982ல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவை எதிர்த்துப் போட்டியிட்ட றோகண விஜேவீரவுக்கு 4.6 வீதமான வாக்குகள் கிடைத்தது. கிளர்ச்சிக் குழுவாக இருந்த ஜே.வி.பி., ஜே.ஆரின் ஆசிர்வாதத்தோடு அரசியல் களத்துக்கு வந்தது. ஆனால், 1987ல் ராஜிவ் காந்தியுடன் ஜே.ஆர். ஒப்பந்தம் செய்தபோது, தேசபக்தர்கள் என்ற பெயரில் இந்திய எதிர்ப்பை ஜே.வி.பி. பகிரங்கமாக வெளிப்படுத்தியது. ஜே.வி.பி.யின் வன்செயலால் பெருமளவு அழிவு தெற்கில் இடம்பெற்றது. அவ்வேளை ஜே.வி.பி.யை அடக்குவதற்கு ஜே.ஆர். இராணுவ பலத்தை பயன்படுத்தினார். இக்காலத்தில் ஜே.ஆரின் அமைச்சரவையில் முக்கியமான ஒருவராக அவரது பெறாமகனான ரணில் விக்கிரமசிங்க இருந்தமை குறிப்பிடப்பட வேண்டியது.

1989ல் ஜனாதிபதியாகிய ஆர்.பிரேமதாச ஜே.வி.பி.யினரை படுகொலை செய்ததாக குற்றச்சாட்டு உண்டு. இதற்கென ரணிலின் பியகம தொகுதியில் அமைந்திருந்த பட்டலந்த வதைமுகாம் எண்ணுக்கணக்கற்ற ஜே.வி.பி.யினரை சித்திரவதைக்குள்ளாக்கி படுகொலை செய்தமை அப்போதே தெரியவந்திருந்தது. இது தொடர்பாக விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டு அறிக்கை கையளிக்கப்பட்டதாயினும் அது இதுவரை குளிர்சாதன பெட்டிக்குள் புதைக்கப்பட்டிருந்தது.

2004ம் ஆண்டில் சந்திரிகா குமாரதுங்க தலைமையில் இலங்கை அரசாட்சி மாறிய வேளையில் ஜே.வி.பி. நாடாளுமன்ற அரசியல் ஊடாக அவரோடு இணைந்து இயங்கியது. அப்போது நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த அநுர குமர திஸ்ஸநாயக்க சந்திரிகா அரசில் அமைச்சராகவும் இருந்தார். 1988ம் ஆண்டு பெப்ரவரி மாதம் சந்திரிகா குமாரதுங்கவின் கணவரான நடிகர் விஜய குமாரதுங்க அவரது இல்லத்தின் முன்னால் படுகொலை செய்யப்பட்டதற்கு ஜே.வி.பி.யினரே காரணம் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டது. இது தொடர்பாகக் கைது செய்யப்பட்ட பெர்னாண்டோ என்பவர் இக்கொலையை ஜே.வி.பி.யினரின் உத்தரவின் பேரில் தாமே செய்ததாகவும் ஒப்புதல் அளித்திருந்தார்.

ஆனால், சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகிய பின்னர் இக்கொலை தொடர்பாக நியமித்த விசாரணைக் கமிஷன் முன்னர் ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாசவும் அவரது இரண்டு அமைச்சர்களும் இக்கொலையுடன் சம்பந்தப்பட்டதாக தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது. இதனால் ஜே.வி.பி.யினரை தமது அரசில் சேர்த்துக் கொள்வதில் சந்திரிகாவுக்கு இடைஞ்சல் இருக்கவில்லை. தமிழர் தரப்புடன் போர் நடத்திய சந்திரிகா குமாரதுங்கவுக்கு முழு ஆதரவும் வழங்கிய ஜே.வி.பி., சந்திரிகா சமாதான பேச்சுவார்த்தை நடத்தியதை கண்டித்து அரசிலிருந்து வெளியேறியது இன்றைய சூழ்நிலையில் நினைவுபடுத்தப்பட வேண்டியது.

ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்சவை எதிர்த்து ரணிலின் ஐக்கிய தேசிய கட்சியின் கூட்டணி சார்பாக முன்னாள் ராணுவ தளபதி சரத் பொன்சேகா போட்டியிட்டபோது அவருக்கு ஜே.வி.பி. ஆதரவு வழங்கியதையும் இப்போது நினைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. ஆக, கடந்த காலங்களில் இப்போது தேசிய மக்கள் சக்தி (என்.பி.பி.) என அழைக்கப்படும் ஜே.வி.பி., சிங்கள அரசியல் கட்சிகள் அனைத்துடனும் உடன்பட்டும் முரண்பட்டும் தனது இடத்தை ஸ்திரப்படுத்தி வந்ததை அரசியல் வரலாற்றாளர்கள் உன்னிப்பாகப் பதிவு செய்துள்ளனர்.

இறுதியாக இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத்தேர்தலிலும் பெரு வெற்றி கண்ட அநுர குமர தரப்பிலான தேசிய மக்கள் சக்தி, ஏற்கனவே ஆட்சிக் கட்டிலில் இருந்த சிங்களத் தலைமைகளை ஏதோ ஒருவகையில் குற்றக்கூண்டில் ஏற்றும் வேலையை ஆரம்பித்துள்ளது. இப்படிக் கூறுவதால் குறிப்பிட்ட சிங்களத் தலைமைகள் குற்றமற்றவர்கள் என்று அர்த்தமில்லை.

ஊழல் ஒழிப்பு, மோசடிகாரர்களுக்கு தண்டனை, துாய நாட்டைக் கட்டியெழுப்புவது என்பவைகளை தங்கள் கொள்கையாக பிரகடனம் செய்து ஆட்சிக்கு வந்த அநுர குமர தரப்பு சொன்னவைகளை செய்யாது தயக்கம் காட்டுவதாக குற்றஞ் சுமத்தப்பட்ட நிலையை மாற்ற தனது நடவடிக்கைகளை திட்டமிட்டவாறு செயற்பட ஆரம்பித்துள்ளது. இதனை, எதிர்க்கட்சிகளை அழிப்பதாகவும், ஜனநாயக ஒழிப்பின் ஊடாக சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த முனைவதாகவும் குற்றஞ்சாட்டுவோரும் உண்டு.

அநுர குமர அரசு எத்தகைய நடவடிக்கைகளை எடுப்பினும் அவை பகிரங்கமாக சட்டத்துக்கும் நீதிக்கும் உட்பட்டதாக இருக்க வேண்டுமென மக்கள் விரும்புவதை புறக்கணிக்கக் கூடாது என்பதே பலரதும் விருப்பம். ஆனால், வேகம் கொள்ளும் அரச தரப்பின் செயற்பாடுகள் எதிர்கட்சிகளே இல்லாத அரசாட்சி முறைமை ஒன்றை இலங்கையில் ஏற்படுத்துவதே இறுதி இலக்காகலாம் என்னும் சந்தேகம் வலுப்பெற்று வருகிறது. ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளது போல இவ்விடயத்திலும் இந்தியாவின் ஆதரவு தேசிய மக்கள் சக்திக்கு இருக்குமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமுகமான உறவுகளின் முக்கியத்துவத்தை விளங்கிக்கொண்ட மோடியும் திஸநாயக்கவும்!



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

கடந்தவார இறுதியில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் பல அம்சங்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.

ஒரு தசாப்த காலத்திற்குள் நான்கு தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்த ஒரு இந்திய பிரதமராக மாத்திரமல்ல, ஒரேயொரு வெளிநாட்டுத் தலைவராகவும் மோடியே விளங்குகிறார். கடந்த வார விஜயத்துக்கு முன்னதாக அவர் மூன்று தடவைகள் இலங்கைக்கு வந்திருந்தார்.

2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மோடி இலங்கைக்கு மேற்கொண்ட மூன்று நாள் விஜயம் 28 வருடங்களுக்கு பிறகு இந்திய பிரதமர் ஒருவரின் இலங்கைக்கான முதலாவது இரு தரப்பு விஜயமாக அமைந்தது. (அதற்கு முதல் இறுதியாக இருதரப்பு விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்த இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியே ஆவார். இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக அவர் வந்தார்) தனது முதலாவது விஜயத்தின் போது இலங்கை பாராளுமன்றத்திலும் மோடி உரையாற்றினார்.

அடுத்ததாக 2017 மே மாதத்தில் இலங்கையில் நடைபெற்ற சர்வதேச வெசாக் தினக் கொண்டாட்டங்களில் பிரதம விருந்தினராக மோடி கலந்து கொண்டார். 2019 ஈஸ்டர்


ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கு பிறகு ஆறு வாரங்கள் கழித்து ஜூன் மாதம் இரண்டாம் வாரத்தில் மோடி மீண்டும் இலங்கைக்கு வந்தார். தாக்குதல்கள் இடம்பெற்ற கிறிஸ்தவ தேவாலயங்களில் ஒன்றான கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்தை பார்வையிட்டதுடன் அவர் பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் இலங்கைக்கு தனது நாட்டின் ஒருமைப்பாட்டையும் வெளிக்காட்டினார். அவரின் அந்த மூன்று விஜயங்களும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக்காலத்திலேயே இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சியாக மூன்று தடவைகள் பிரதமராக தெரிவுசெய்யப்பட்டதால் மோடியால் அடுத்தடுத்து நான்கு தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்யக்கூடியதாக இருந்தது. மூன்று வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட முன்னென்றும் இல்லாத பொருளாதார நெருக்கடியை அடுத்து மூண்ட மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு பெருமளவுக்கு மாற்றமடைந்த அரசியல் சூழ்நிலையில் இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக இடதுசாரி அரசியல் கட்சி ஒன்று, அதுவும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இரு தடவைகள் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஒரு கட்சி அதிகாரத்துக்கு வந்திருக்கும் பின்புலத்தில் விஜயம் மேற்கொண்ட முதல் வெளிநாட்டு தலைவராக மோடி விளங்குகிறார்.

மோடியின் கடந்த வாரத்தைய விஜயம் குறித்து கருத்துக்களை வெளியிட்ட அரசியல் அவதானிகள் பலரும் ஊடகங்களும் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ அரசியல் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவின் ( ஜே.வி.பி.) இந்திய விரோத கடந்த காலத்தை நினைவுபடுத்துவதற்கு தவறவில்லை. 1987 ஜூலை இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதை அடுத்து ஜே.வி.பி. மிகவும் தீவிரமான இந்திய விரோத பிரசாரத்துடன் அதன் இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சியை முன்னெடுத்த காலப் பகுதியில் பல்கலைக்கழக மாணவனாக அந்த இயக்கத்தில் இணைந்து செயற்படத் தொடங்கிய ஜனாதிபதி திசாநாயக்க தற்போது ஒரு இந்திய பிரதமரை வரவேற்கிறார் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

ஜே.வி.பி.யில் இருந்து பிரிந்து தனியாக இயங்குவோரின் முன்னரங்க சோசலிஸ்ட் கட்சி, 54 வருடங்களுக்கு முன்னர் ஜே.வி.பி.யின் முதலாவது ஆயுதக் கிளர்ச்சி தொடங்கிய அதே தினத்தில் ( ஏப்ரில் 5 ) ஜனாதிபதி திசாநாயக்கவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் "விஸ்தரிப்புவாத" இந்தியாவின் பிரதமருக்கு செங்கம்பள வரவேற்பு அளிப்பதாக குற்றஞ்சாட்டியதையும் காணக்கூடியதாக இருந்தது.

ஜே.வி.பி. இந்திய விரோத கடந்த காலத்தைக் கொண்டிருக்கிறது என்பது உண்மையே. ஆனால், அந்த கட்சியினர் கடந்தகால கொள்கைகளையும் அணுகுமுறைகளையும் பெருமளவுக்கு கைவிட்டு சமகால உள்நாட்டு மற்றும் சர்வதேச புவிசார் அரசியல் நிவைரங்களுக்கு இசைவான முறையில் தங்களை தகவமைத்துக் கொள்வதில் என்ன தவறு இருக்கிறது? இந்திய விரோதக் கொள்கைகளை ஜே.வி.பி. தொடர்ந்தும் உறுதியாக கடைப்பிடித்திருக்க வேண்டும் என்பதா அதன் கடந்த காலத்தை நினைவுபடுத்தி விமர்சனங்களை முன்வைப்பவர்களின் விருப்பம்?



ஜே.வி.பி.யின் கடந்த காலத்தைப் பற்றி இந்தியாவே கவலைப்படாத நிலையில் அத்தகைய விமர்சனங்கள் அர்த்தமற்றவையாகி விடுகின்றன. அண்மைக் காலத்தில் இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளை வளர்ப்பதில் மிகுந்த அக்கறையுடன் செயற்படும் ஒரு இலங்கை அரசாங்கமாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அடையாளம் காணப்படுவது முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒரு அம்சமாகும்.

ஜே.வி.பி.யின் ஆதிக்கத்தில் உள்ள அரசாங்கம் ஒன்று புதுடில்லியுடன் நட்பார்வமில்லாத ஒரு உறவுமுறையையே கொண்டிருக்கும் என்றும் இந்தியாவுக்கு பாதகமான முறையில் சீனாவுடனான உறவுகளுக்கே அது கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கும் என்றும் ஒரு எண்ணம் பரவலாக இருந்தது. இந்தியாவின் பாதுகாப்பு அக்கறைகளில் தேசிய மக்கள் சக்தி பெருமளவுக்கு உணர்திறனை வெளிக்காட்டாமல் போகக்கூடும் என்று எதிர்பார்த்தவர்களும் இருக்கிறார்கள். ஆனால், அவை எல்லாவற்றையும் ஜனாதிபதி திசாநாயக்கவின் அரசாங்கம் அதன் செயற்பாடுகள் மூலம் பொய்யாக்கிவிட்டது.

பிரதமர் மோடியின் விஜயம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் நெருக்கமானவையாக இருப்பதையும் புதுடில்லியுடன் உறவுகளை மேம்படுத்துவதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கருத்தூன்றிய அக்கறையுடன் செயற்படுவதையும் தெளிவாக வெளிக்காட்டியிருக்கிறது. வெளிநாட்டு தலைவர்களுக்கு இலங்கை அரசாங்கம் வழங்கும் அதியுயர் கௌரவ விருதான ' சிறிலங்கா மித்ர விபூஷண ' மோடிக்கு வழங்கப்பட்டிருப்பதையும் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதையும் இரு நாடுகளுக்கும் இடையில் நிலவும் நெருக்கமான உறவுகளுக்கு சான்றாக இந்தியாவின் முக்கியமான சில தேசியப் பத்திரிகைகள் ஆசிரிய தலையங்கங்களில் சுட்டிக்காட்டியிருந்தன.

நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை கடந்த வெள்ளிக்கிழமை (11/4) "மோடியின் விஜயம் புதுடில்லிக்கு நெருக்கமாக கொழும்பைக் கொண்டுவந்திருக்கிறது" என்ற தலைப்பில் தீட்டியிருக்கும் ஆசிரிய தலையங்கத்தில் "பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயம் மூலோபாய நம்பிக்கையை வலுப்படுத்தியிருப்பதுடன் ஒத்துழைப்பை மேலும் வளர்த்து இரு நாடுகளுக்கும் இடையில் தீர்வுகாணப்படாமல் இருக்கும் பிரச்சினைகளை கையாளுவதற்கான அரங்கை அமைத்துக் கொடுத்திருக்கிறது" என்று குறிப்பிட்டிருக்கிறது.

மோடியின் விஜயத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருப்பது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். அந்த உடன்படிக்கையை பொறுத்தவரை, இலங்கை சுதந்திரமடைந்தபோது பிரிட்டனுடன் செய்துகொண்ட பாதுகாப்பு உடன்படிக்கைக்கு (அது பண்டாரநாயக்க ஆட்சியில் 1956 ஆம் ஆண்டில் இரத்து செய்யப்பட்டது) பிறகு அதையொத்த உடன்படிக்கை ஒன்று முதன் முதலாக வெளிநாடு ஒன்றுடன் இலங்கை அரசாங்கத்தினால் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த வருடம் டிசம்பரில் ஜனாதிபதி திசாநாயக்க புதுடில்லிக்கு மேற்கொண்ட விஜயம் உட்பட முன்னைய சந்தர்ப்பங்களில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை தொடர்ந்தே இந்த பாதுகாப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவது சாத்தியமாகியிருக்கிறது.

ஏற்கெனவே இரு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்புத்துறையில் நிலவும் ஒத்துழைப்பு செயற்பாடுகளை ஒரு கட்டமைப்புக்குள் கொண்டுவருவதாக இந்த உடன்படிக்கை அமைந்திருக்கிறது என்று இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்றி கொழும்பில் ஊடகங்களிடம் கூறினார்.

இந்தியாவும் இலங்கையும் பொதுவான பாதுகாப்பு நலன்களைக் கொண்டிருப்பதுடன் அவற்றின் பாதுகாப்பு ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்ததாக மாத்திரமல்ல, பரஸ்பரம் தங்கியிருக்கிறது என்று கூறிய பிரதமர் மோடி இந்தியாவின் நலன்கள் மீது ஜனாதிபதி திசாநாயக்க கொண்டிருக்கும் அக்கறைக்காக நன்றியுடையவனாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை, ஜனாதிபதி திசாநாயக்க முன்னைய சந்தர்ப்பங்களில் கூறியதைப் போன்று இந்தியாவின் பாதுகாப்புக்கும் பிராந்திய உறுதிப்பாட்டுக்கும் எதிராக இலங்கையின் பிராந்தியம் பயன்படுத்தப்படுவதற்கு ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று மீண்டும் உறுதியளித்தார்.

சென்னை 'தி இந்து' பத்திரிகை ஏப்ரல் 8 ஆம் திகதி அதன் ஆசிரிய தலையங்கத்தில் பாதுகாப்புத்துறையில் குறிப்பிட்ட சில ஏற்பாடுகளை புரிந்துணர்வு உடன்படிக்கை இருதரப்பு அடிப்படையில் விதிமுறைப்படுத்தியிருக்கின்ற போதிலும், பாதுகாப்பு ஒத்துழைப்பில் கருத்தூன்றிய கவனத்துடன் செயற்படுவதில் மெய்யான அக்கறை கொண்டிருப்பதை நிரூபிக்க வேண்டியது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பொறுப்பேயாகும் என்றும் திருகோணமலை துறைமுகமோ அல்லது இலங்கையின் வேறு எந்த துறைமுகமுமோ இந்தியாவுக்கு எதிராக மூன்றாவது நாடொன்றினால் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப் போவதில்லை என்று 1987 ஆம் ஆண்டில் காணப்பட்ட புரிந்துணர்வு இந்தியாவின் ஐயுறவுகளை அகற்றுவதற்கு உதவவில்லை என்பதை இலங்கை உணர்ந்து கொள்வது அவசியம் என்றும் குறிப்பிட்டிருக்கிறது.

பிரதமர் மோடியினதும் ஜனாதிபதி திசாநாயக்கவினதும் முன்னிலையில் இரு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கு புறம்பாக மின்விநியோகம், சுகாதாரம், மருந்து உற்பத்தி, டிஜிட்டல் தீர்வுகள் மற்றும் கிழக்கு மாகாணத்துக்கான நலத்திட்டங்கள் தொடர்பாக வேறு ஆறு புரிந்துணர்வு உடன்படிக்கைகளும் கைச்சாத்தாகின. இந்த உடன்படிக்கைகளில் அடங்கியிருக்கும் ஏற்பாடுகள் குறித்து எதிர்க்கட்சிகளினால் கிளப்பப்படும் சந்தேகங்களுக்கு கடந்த வாரம் பாராளுமன்றத்தில் பதிலளித்த வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் சகல உடன்படிக்கைகளும் அமைச்சரவையினாலும் சட்டமா அதிபரினாலும் அங்கீகரிக்கப்பட்டவையே என்றும் அவற்றில் எந்த ஒன்றுமே சட்டவிரோதமானவை அல்ல என்றும் கூறினார்.


### பாக்குநீரிணை மீனவர் தகராறு

இது இவ்வாறிருக்க, கடந்த வாரத்தைய பேச்சுவார்த்தைகளின்போது இரு தரப்புகளுக்கும் இடையில் ஓரளவு முரண்பாடு வெளிக்காட்டப்பட்ட விவகாரம் என்றால் அது மீனவர் பிரச்னையேயாகும். இரு தலைவர்களும் மீனவர் பிரச்சினை குறித்து தாங்கள் ஆராயந்ததாக அறிக்கைகளில் குறிப்பிட்டனர்.

மீனவர் பிரச்னையில் 'மனிதாபிமான அணுகுமுறையை கடைப்பிடிப்பது தொடர்பில் இலங்கை ஜனாதிபதியுடன் இணங்கிக்கொண்டதாக கூறிய பிரதமர் மோடி இந்திய மீனவர்களும் அவர்களின் படகுகளும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திய அதே வேளை, ' நிலைபேறான தீர்வொன்றைக் காண்பதற்கு ஒத்துழைப்பு அணுகுமுறை அவசியம் என்று ஜனாதிபதி திசாநாயக்க வலியுறுத்தினார். இழுவைப் படகுகளினால் கடல்சார் சுற்றுச் சூழலுக்கு விழைவிக்கப்படுகின்ற சேதத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறிய அவர் சட்டவிரோத மீன்பிடியை நிறுத்துவதற்கு உடனடியாக தீர்க்கமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

(மறுபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இலங்கையின் வடபகுதி மீனவர்களை பெரிதும் பாதிக்கின்ற மீனவர் பிரச்சினைக்கு தீர்க்கமான தீர்வொன்றைக் காணுமுகமாக இழுவைப்படகுகள் மூலம் மீன்பிடிப்பதை தடை செய்ய வேண்டும் என்று இந்திய பிரதமரிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டனர்.

கொழும்பில் செய்தியாளர்கள் மகாநாட்டில் உரையாற்றிய இந்திய வெளியுறவு செயலாளர் மீனவர் பிரச்னை குறித்து இரு தரப்பினரும் கணிசமானளவுக்கு விரிவாக ஆராய்ந்ததாகவும் இது மீனவர்களின் அன்றாட வாழ்வாதாரத்துடன் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்பதால் அண்மைக்காலத்தில் எடுத்த குறிப்பிட்ட சில நடவடிக்கைகளை இலங்கையினால் மீள்பரிசீலனை செய்யமுடியும் என்று பிரதமர் மோடி பேச்சுக்களின்போது வலியுறுத்தியதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறிப் பிரவேசித்து சட்டவிரோதமாக மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களை கைதுசெய்வதையும் அவர்களின் படகுகளை கைப்பற்றுவதையுமே இலங்கை மேற்கொண்ட - மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டிய அண்மைக் கால நடவடிக்கைகள் என்று மோடி கூறியிருக்கிறார் என்பது தெளிவானது.

**இனப்பிரச்சினை**

இதனிடையே, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நீண்டகாலமாக சர்ச்சைக்குரியதாக இருந்துவந்த தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியா இலங்கை அரசாங்கத்துக்கு அசௌகரியத்தைக் கொடுக்கக் கூடிய அணுகுமுறை எதையும் இனிமேல் கடைப்பிடிக்கப் போவதில்லை என்பதையும் பிரதமர் மோடியின் விஜயம் வெளிக்காட்டியிருக்கிறது.

இருதரப்பு உறவுகளுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களுக்குள் தமிழர் பிரச்சினையை இந்தியா கொண்டு வருவதை கொழும்பு இனிமேலும் விரும்பவில்லை என்பது ஏற்கெனவே தெளிவாக வெளிக்காட்டப்பட்டிருக்கிறது. அண்மைய தசாப்தங்களாக இந்திய அரசாங்கங்களும் தமிழர் பிரச்சினையில் இலங்கையுடன் முரண்படக்கூடிய அணுகுமுறைகளை கடைப்பிடிப்பதை தவிர்த்து வந்திருக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ச, கோட்டாபய ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் புதுடில்லிக்கு மேற்கொண்ட விஜயங்களின்போது அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திய பிரதமர் மோடி கடந்த வருடம் டிசம்பரில் ஜனாதிபதி திசாநாயக்கவிடம் அவ்வாறு பிரத்தியேகமாக வலியுறுத்துவதை தவிர்த்தார். உள்நாட்டில் திசாநாயக்கவுக்கு பிரச்னைகளை ஏற்படுத்தக்கூடியதாக எதையும் சொல்லி விடக்கூடாது என்பதில் மோடி எச்சரிக்கையாக இருக்கிறார் என்று தெரிகிறது.

புதுடில்லியில் திசாநாயக்கவுடன் கூட்டாக நடத்திய செய்தியாளர்கள் மகாநாட்டில் மோடி இலங்கை அரசாங்கம் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதுடன் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்தும் என்று எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டார். கடந்தவாரம் கொழும்பில் கூட்டு செய்தியாளர்கள் மகாநாட்டிலும் மோடி மீண்டும் அதையே கூறினார். 13 வது திருத்தம் பற்றி எதையும் அவர் கூறவில்லை.

"இலங்கை ஜனாதிபதியுடன் புனரமைப்பு மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக ஆராய்ந்தேன். சகல சமூகங்களையும் அரவணைக்கும் தனது அணுகுமுறையை எனக்கு அவர் விளக்கிக் கூறினார். இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் என்றும் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவது மற்றும் மாகாணசபை தேர்தல்களை நடத்துவது தொடர்பிலான கடப்பாட்டை நிறைவு செய்யும் என்றும் நாம் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம்" என்று மோடி கூறினார்.

ஜனாதிபதி திசாநாயக்க புதுடில்லியிலும் கொழும்பிலும் தமிழர் பிரச்சினை தொடர்பில் இந்திய பிரதமர் விடுத்த வேண்டுகோள்களுக்கு பதிலளிப்பதை தவிர்த்தார். உள்ளூராட்சி தேர்தல்களுக்கு பிறகு மாகாணசபை தேர்தல்களை நடத்துவதாக மோடியிடம் திசாநாயக்க கூறியதாக தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி சில கொழும்பு பத்திரிகைகள் கடந்த வாரம் செய்தி வெளியிட்டிருந்தன.

**தமிழ்க்கட்சிகள் சந்திப்பு**

இலங்கை தமிழரசு கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட் ), தமிழீழ மக்கள் விடுதலை இயக்கம் (ரெலோ) ஆகியவற்றின் தலைவர்கள் இந்திய பிரதமரைச் சந்தித்து தங்களது நிலைப்பாடுகளை எடுத்துக்கூறினர்.

அர்த்தமுடைய அதிகாரப் பரவலாக்கலை நோக்கிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு இலங்கை அரசாங்கத்தை இந்தியா ஊக்குவிக்க வேண்டும் என்று அவரிடம் அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். ஜனாதிபதி திசாநாயக்க முன்னிலையில் தமிழர் பிரச்சினை தொடர்பாக கூறியதை தவிர வேறு எதையும் பிரதமர் மோடி தமிழ் அரசியல் தலைவர்களிடம் கூறியதாக தெரிய வரவில்லை.

ஆனால், தமிழர் பிரச்சினைக்கு அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் காண்பதற்கு அனுசரணையாகச் செயற்படுவதில் இந்தியாவின் பாத்திரத்தையும் 1987 இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துவதற்கு தமிழ்க்கட்சிகளுக்கு மோடியின் விஜயம் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

**மலையக கட்சிகள்**

மலையக தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளும் பிரதமர் மோடியைச் சந்தித்தனர். இந்த சந்திப்பு குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தாங்கள் இந்திய பிரதமரிடம் அரசியல் கோரிக்கை எதையும் முன்வைத்து அவர்களுக்கு சுமையை அதிகரிக்க விரும்பவில்லை என்றும் மலையக மக்களின் நல்வாழ்வுக்காக சமூக - பொருளாதார உதவிகளையே தற்போது இந்தியாவிடம் எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகளை முன்னெடுக்கும்போது மலையக மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண்பதை நோக்கிய யோசனைகளை முன்வைத்து பேச்சுவார்த்தைகளை நடத்தப்போவதாக மனோ கணேசன் குறிப்பிட்டார்.

சமகால புவிசார் அரசியல் நிலைவரங்கள் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளைப் பேணுவதில் ஜனாதிபதி திசாநாயக்கவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் தீவிரமான அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதும் அவர்களுக்கு அசௌகரியத்தை கொடுக்கக்கூடிய அணுகுமுறைகளை தவிர்த்து இந்தியாவின் மூலோபாய மற்றும் பொருளாதார நலன்களை பேணிக்காப்பதில் மோடி அரசாங்கம் மிகுந்த நிதானத்துடன் செயற்படுகின்றது என்பதுமே தற்போதைய இந்திய - இலங்கை உறவுச்சமநிலையில் இருந்து நாம் புரிந்து கொள்ளக் கூடிய யதார்த்தமாகும்.

தேசிய மக்கள் சக்திக்கு சீனாவுடன் அரசியல் ரீதியில் என்னதான் நெருக்கம் இருந்தாலும், சீனாவையும் இந்தியாவையும் சமதூரத்தில் வைத்து உறவுகளைப் பேணவேண்டிய நிர்ப்பந்த நிலையில் அரசாங்கம் இருக்கிறது. இன்றைய புவிசார் அரசியல் நிலைவரங்களின் அடிப்படையில் நோக்கும்போது அரசாங்கம் ஒன்று அதிகாரத்தில் நீடிப்பதற்கு உள்நாட்டில் மக்களின் ஆதரவு மாத்திரமல்ல, சர்வதேச சமூகத்தின் வல்லாதிக்க நாடுகளின் ஆதரவும் அனுசரணையும் கூட அவசியமாகிறது. அதனால், ஜனாதிபதி திசாநாயக்க தனது அரசாங்கத்தின் உறுதிப்பாட்டுக்கு அயல்நாடான இந்தியாவின் ஒத்துழைப்பின் அவசியத்தை நிச்சயமாக புரிந்துகொண்டிருப்பார் என்று நம்பலாம்.

**மாறிவரும் மனோபாவம்**

தேசிய மக்கள் சக்தி / ஜே.வி.பி.யின் கடந்தகால இந்திய விரோத கொள்கைகளில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் தென்னிலங்கையில் இந்திய விரோத சிந்தனைகளிலும ஒரு மாற்றத்துக்கு வழிவகுத்திருக்கிறது போன்று தெரிகிறது. இந்தியாவுடன் ஒத்துழைத்துச் செயற்படாவிட்டால் பொருளாதார நெருக்கடியில் இருந்து முழுமையாக மீட்சி பெறமுடியாது என்றும் கடந்தகால மனோபாவங்களை கைவிட்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியுடன் இலங்கை தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும் பரவலாக ஒரு எண்ணம் வளர ஆரம்பித்திருப்பதை உணரக்கூடியதாக இருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் பெருமளவுக்கு சமுகமானவையாக இருக்கும் என்றும் பொருளாதார ஊடாட்டங்களுக்கும் வளர்ச்சிக்கும் ஏராளமான வாய்ப்புகள் இருக்கும் என்றும் முக்கியமான அரசியல் மற்றும் பொருளாதார நிபுணர்களும் அவதானிகளும் அபிப்பிராயம் வெளியிடுவதை காணக்கூடியதாக இருக்கிறது.

இந்தியாவுக்கு விரோதமான கொள்கையுடன் தொடங்கப்பட்ட ஒரு அரசியல் இயக்கத்தின் தலைமையின் கீழான ஆட்சியில் இந்தியாவுடனான உறவுகள் மற்றைய கட்சிகளின் அண்மைய ஆட்சிக் காலங்களில் இருந்ததையும் விட மிகவும் சுமுகமானதாகவும் நெருக்கமானதாகவும் இருக்கின்ற ஒரு சுவாரஸ்யமான அரசியல் நிலைவரத்தைக் காண்கிறோம்.

இதனிடையே ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தாங்கள் அல்ல இந்தியாதான் மாறியிருக்கிறது என்றும் இந்தியா முன்னரைப் போன்று இப்போது இல்லை என்பதாலேயே இரு நாடுகளுக்கும் இடையில் உடன்படிக்கைகளை செய்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது என்றும் கூறுகின்றார். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** 'சீனாவின் அனு சரணையில், சீனாவின் அடிவருடிகள் இந்தியாவுடன் கைச் சாத்திட்டுள்ள ஒப்பந்தங்களை குழப்ப நினைத்தால் நிச்சயமாக அதனை எதிர்த்து நிற்போம். அதேபோன்று வடக்கு மற்றும் கிழக்கில் சீனாவின் எந்த நடவடிக்கையும் மேற்கொள்வதற்கு அனுமதிக்க முடியாது என்பதையும் கூறிக் கொள் கின்றேன்" என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளாரே.



**வியுக்தியார்:** அவர் இப்படிக் கூறியதாக வெளிவந்த செய்தியைப் படித்த போது, எனக்கு தமிழ் திரைப்படம் ஒன்றுதான் ஞாபகத்திற்கு வந்தது. சிவாஜி கணேசன் நடித்த 'தங்கப்பதக்கம்' திரைப்படத்தில் துக்ளக் சோ இரட்டை வேடத்தில் நடித்திருப்பார். ஒருவர் பொலிஸ் அதிகாரியான சிவாஜி கணேசனின் கீழ் பணியாற்றும் பொலிஸ் அதிகாரியாகவும் மற்றையவர் ஒரு அரசியல் வாதியாகவும் சோ நடித்திருப்பார். சென்னை மாநகர கவுன்சிலரான அவர் ஒரு அரசியல் கூட்டத்தில் பேசும் போது சொல்லுவார்.. 'அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக் கும் நான் எச்சரிக்கை விடுக்கின்றேன். நான் ஆணையிட் டால் உங்கள் நாட்டில் பூகம்பம் வெடிக்கும்".... இந்த நகைச்சுவைக் காட்சிதான் அந்தச் செய்தியை படித்த போது ஞாபகத்திற்கு வந்தது.

---

**இரா. ஜெயரூபன்,**
**பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** வசாவிளான் - பலாலி வீதி அண்மையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் திறக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும், பலத்த கட் டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆனால் இது குறித்து கருத்து தெரிவித்துள்ள, தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர், மதியபரணம் ஆபிரகாம் சுமந்திரன், 'இந்த பகுதி உயர்பாதுகாப்பு வலயமாக சட்டபூர்வ மாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பகுதியில்லை. மாலை 6 மணியிலிருந்து காலை 5 மணிவரை போக்குவரத்தை கட்டுப்படுத்துவதற்கு எந்த சட்டம் உங்களுக்கு அனுமதி வழங்கியது?" என்று கேள்வி கேட்டிருக்கின்றாரே.



**வியுக்தியார்:** நியாயமான கேள்விதானே? வீதியைத் திறந்தவர்கள் பல கட்டுப்பாடுகளை விதித்திருக்கின்றனர். அப்படி கட்டுப்பாடுகள் விதிக்கவேண்டியது பாதுகாப்பு காரணங்களுக்காக அவசியமானது என்றால், அதனை அவசரமாக திறக்கவேண்டியது ஏன் என்ற கேள்வி எழுவதும் தவிர்க்கமுடியாததுதான். உள்ளூராட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டு தேர்தல் பிரசாரங்களும் நடந்தகொண்டிருக்கும்போது இவ்வாறு அவசரம் அவசரமாக வீதியைத்திறந்தது பற்றியும் அவர் கேள்வி எழுப்பியிருக்கிறார். கட்சியின் பதில் செயலாளர் மட்டுமல்ல, ஒரு சட்டத்தரணி அவர். எந்தச் சட்டத்தின்கீழ் கட்டுப்பாடுகள் விதித்திருக்கிறீர்கள் என்று கேட்டவர், எந்தச் சட்டத்தின்கீழ் பூட்டி வைத்திக்கிறீர்கள் என்றும் முன்னதாக கேள்வி எழுப்பியிருக்கலாம்.

---

**எம். அகிலேஸ்வரன்**
**சித்தன்கேணி.**

**கேள்வி:** ஜி.எஸ்.பி. பிளஸ் வரிசலுகை இலங்கைக்கு வேண்டுமானால் ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்திருக்கும் நிபந்தனைகளை இலங்கை பின்பற்றியாக வேண்டும். இணக்கப்பாடுகளை நிறைவேற்றியாக வேண்டும். இல்லாவிடின், ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகை இலங்கைக்கு கிடைக்காமல் போய்விடும் என்று இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரினோ தெரிவித்திருக்கிறார். இதேவேளை அமெரிக்காவும் இலங்கையிலிருந்து தமது நாட்டுக்குள் இறங்குமதியாகும் பொருட்களுக்கான வரியை அதிகரித்திருக்கின்றது. இந்த விடயங்கள் இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் பாரிய தாக்கத்தைச் செலுத்தும் என்று பலரும் எதிர்வுகூறிவருகின்றனர். அப்படியெனில் இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளை பின்பற்றும் என்று நம்புகின்றீர்களா?




# வியுக்தியார் பதில்கள்



**வியுக்தியார்:** ஜிஎஸ்பி வரிச்சலுகையை எமது நாட்டிற்கும் வழங்குங்கள் என்று இலங்கைதான் ஐரோப்பிய ஒன்றியத்திடம் கேட்டு இந்தச் சலுகையை பெற்றுவருகின்றது. அப்படி கேட்டுபெறுகின்றபோது அவர்கள் விதிக்கும் நிபந்தனைளையும் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். ஆனால் அவர்களின் முக்கிய நிபந்தனை என்பது, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கவேண்டும் என்பதும் ஒன்று. ஆனால் அண்மையில்கூட பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தவேண்டிய தேவையும் அரசுக்கு இருப்பதாக ஒரு அமைச்சர் கூறியிருந்தார். அரசாங்கத்தில் இருக்கும் ஒருசிலர் அது நீக்கப்படும் என்று கூறிக்கொண்டிருந்தாலும், அதற்கான அறிகுறிகளை காணமுடியவில்லை. நாட்டின் வருமானத்தில் முக்கிய பங்குவகிக்கும் ஆடைத் தொழில்துறையின் முக்கிய ஏற்றுமதி நாடுகளான ஐரோப்பாவும் அமெரிக்காவும் இப்படி வரிகளை அதிகரித்தால், அந்த தொழில்துறையே ஆட்டம் காணலாம் என்று பொருளியலாளர்கள் எச்சரித்திருக்கின்றனர். இது ஏற்றுமதி வருமானத்தில் மாத்திரமல்ல, பல ஆயிரம் பேர் தொழில்களை இழக்கும் அபாயத்தையும் ஏற்படுத்தும் என்பதால், அரசாங்கம் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளும் என்று நம்புவோம். அமெரிக்காவும் தமது வரி அதிகரிப்பை 90 நாட்களுக்கு இடைநிறுத்தியிருப்பது, அரசாங்கம் இது விடயத்தில் நிதானமாக முடிவெடுக்க உதவலாம்.

---

**சபாலிங்கம் சிறிநாத்,**
**தெல்லிப்பழை.**

**கேள்வி:** தமிழ் மக்களுக்கு உள்ளூராட்சி தேர்தலானது தமிழின இருப்புக்கான தேர்த லாக பார்க்கப்படுகின்ற நிலையில் தமிழ் மக்கள் தமது பொறுப்பை உணராவிட்டால் சரித்திரத்தில் இல்லாமல் ஆக்கப் படுவோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவ ரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளாரே.



**வியுக்தியார்:** ஒவ்வொரு தேர்தலின்போதும் இது தமிழர்களின் இருப்புக்கான தேர்தல், இதுவே கடைசிச் சந்தர்ப்பம், இந்தத் தேர்தலை சர்வதேச சமூகம் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கின்றது... என்று தானே நமது தலைவர்கள் கூறிக் கொண்டிருகின்றனர். கடந்த பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி என்ற ஜேவிபியின் மாயையில் சிக்கி தமிழ் மக்களில் ஒரு பகுதி யினர் ஈர்க்கப்பட்டமை உண்மை என்றும், கவ லைப் பட்டிருக்கும் அவர், அதனால்தான் இன்று தனது 'விடாப்பிடி' கொள்கையிலிருந்து இறங்கிவந்து இன்னும் சிலரையும் தனது கூட்டணியில் சேர்த்திருக்கிறார். கடந்த காலங்களில் யார் யார் மீதெல்லாம் குறைகண்டு பிடித்தாரோ அவர்களையெல்லாம் தன்னுடன் சேர்க் கும் அளவிற்கு அவர் இறங்கிவந்ததற்கு காரணமான தேசிய மக்கள் சக்திக்கு தான் நாம் நன்றி சொல்ல வேண் டும். இப்போது தமிழ் மக்கள் தமது பொறுப்பை உணர்ந்து வாக்களிக்கவேண்டும் என்கிறார், அதாவது தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்கக்கூடாது என்கிறார். தமிழ் அரசுக்கோ, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்ட ணிக்கோ என்றாலும் வாக்களியுங்கள் என்கிறாரோ தெரியவில்லை.

---

**எஸ். விவேகானந்தன்**
**கொழும்புத்துறை.**

**கேள்வி:** யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கு இந்தியாவின் ஆதரவு தேவை என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் சனத் ஜெயசூரியா கோரிக்கை முன்வைத்துள்ளார். 1996 கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணியினர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தனர். இதன்போதே, இந்திய பிரதமரிடம் கிரிக்கெட் ஜாம்பவான் சனத் ஜெயசூரியா யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் மைதானம் அமைக்க ஆதரவை கோரினார். ஆனால் அதற்கு முன்னர் பிரதமர் மோடியைச் சந்தித்த தமிழ்த் தலைவர்கள் எதனைக் கோரியிருந்தார்கள் என்று தெரியுமா?.

**வியுக்தியார்:** ஒற்றையாட்சிக்குள் அவர்களுக்கு எதற்கு சர்வதேச கிரிக்கட் மைதானம்?. முதலில் சமஷ்டி கிடைக்கட்டும், அதற்கு பின்னர் இதுபோன்ற உதவிகளைக் கேட்போம் என்று நமது தலைவர்கள் நினைத்திருப்பார்கள் என்று நினைக்கின்றேன். சந்திப்பில் கலந்துகொண்ட ஒரு தலைவர், யாழ்ப்பாணத்தில் கலாச்சார மண்டபம் கட்டியதற்கு நன்றி தெரிவித்ததுடன், இலங்கையில் இந்தியா மேற்கொள்ளும் திட்டங்கள் மூலம் நமது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு



வழங்கவேண்டும் என்று கோரியிருந்ததாக அறிந்தோம். ஆனால் சனத் ஜெயசூரிய இந்தியப்பிரதமரிடம் இந்தக் கோரிகையை விடுத்ததும், அரசியல் என்றுதான் நினைக்கின்றேன். வடக்கிற்கு முடிந்தளவு செய்து, தமிழ் தேசிய அரசியலை நீர்த்தப்போக செய்யவேண்டும் என்பதில் கொழும்பு தீவிரமாகத்தான் இருக்கின்றதாம்.

---

**எஸ். செந்துஜன்,**
**ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** அரசியற் தளத்தின் அடிப்படை அலகுகளாக உள்ள உள்ளூராட்சி மன்றங்களை வென்றெடுப்பதன் மூலமே, எமது மக்களின் அடிப்படை வாழ்வியலையும், அது சார்ந்த அபிவிருத்திச் செயற்பாடுகளையும் கட்டமைக்க முடியும். அத்தகைய சமூகமயப்பட்ட அரசியலுக்கு அடித்தளம் அமைக் கக்கூடிய உள்ளூராட்சி மன்றங்களை இம்முறையும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கைப்பற்றுவதற்கான ஆணையை எமது மக்கள் வழங்குவார்கள் என்று நான் முழுமையாக நம்புகிறேன் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளாரே.



**வியுக்தியார்:** அரசியற் தளத்தின் அடிப்படை அலகுகளாக உள்ள உள்ளூராட்சி மன்றங்களை இதற்கு முன்னர் வென்றெடுத்த தமிழ் அரசுக்கட்சி அரசியல் தளத்தை மிக இறுக்கமாக கட்டியமைத்ததால்தான், தேசிய மக்கள் சக்தி கடந்த பாராளுமன்ற தேர்தலில் பெருவெற்றி பெற்றதா? என்று அவரிடம் தான் கேட்கவேண்டும். அல்லது உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக அவர்கள் செய்த அபிவிருத்திகளால்தான், நமது பிரதேசம் இன்று 'செழிப்புடன்' இருக்கிறதா என்றும் அவரிடம்தான் கேட்கவேண்டும். கட்சியின் முக்கியஸ்தர்களின் 'தொண்டர்கள்' வெற்றிபெறவேண்டும் என்பதற்காக அவர்கள் இதுபோன்ற வார்த்தை ஜாலங்களை வெளியிடுவது தமிழ் மக்களுக்கு புதிய ஒன்றல்லவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் - அமெரிக்கா போர் பகைமை: மத்திய கிழக்கில் அணுஆயுத ஆபத்து!

ஐங்கரன் விக்கினேஸ்வரா




ஈரானுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே நீண்டகாலமாக பகை முரண்பாடு நிலவி வருகிறது. தற்போது டொனால்ட் ட்ரம்ப் பதவிக் காலத்தில் இரு நாடுகள் இடையேயான மோதல் என்பது இன்னும் வலுத்துள்ளது. ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதை அமெரிக்கா விரும்பாதது தான் இந்த விவகாரத்தின் முக்கிய காரணமாகும்.

குறிப்பாக அணு ஆயுத ஒப்பந்த விவகாரத்தில் அமெரிக்காவும் ஈரானும் தங்கள் நிலைப்பாட்டில் முரண்பட்டு உறுதியாக இருப்பதால் மேலும் பதற்றம் அதிகரித்துள்ளது.

ஈரான் மீது இராணுவ நடவடிக்கை என்ற எச்சரிக்கையை அமெரிக்கா பின்பற்றினால், ஈரான் அப்பகுதியில் உள்ள அமெரிக்க தளங்களைத் தாக்கும் என அந்த நாட்டின் நாடாளுமன்ற சபாநாயகர் அண்மையில் தெரிவித்துள்ளார்.

புதிய அணுசக்தி ஒப்பந்தத்தில் ஈரான் ஒத்துழைக்க மறுத்தால் இராணுவ நடவடிக்கைகளை எதிகொள்ள நேரிடும் என அமெரிக்காவும் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்த மாத தொடக்கத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியதாகக் கூறியிருந்தார். அதில், ஈரான் கையாள இரண்டு வழிகள் உள்ளதாகவும் கூறியிருந்தார்.

ஒன்று இராணுவ ரீதியாக, அல்லது அரசியல் ரீதியான ஒப்பந்தம் செய்து கொள்ளுங்கள் என்றும் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார். இந்த நிலையிலேயே, ஈரானின் புனிதத்தை அமெரிக்கா அழிக்க முயன்றால், பிராந்தியம் முழுவதும் வெடிமருந்துக் கிடங்கில் ஒரு தீப்பொறி போல வெடித்துச் சிதறும் என நாடாளுமன்ற சபாநாயகர் முகமது கலிபாவ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இராணுவ தளங்களும், அவர்களின் கூட்டாளிகளின் தளங்களும் பாதுகாப்பாக இருக்காது என்றார். முன்னதாக ட்ரம்பின் இந்த நகர்வானது ஏமாற்று வேலை என்றே ஈரானிய தலைவர் கமேனி விமர்சித்திருந்தார்.

இதேவேளை ஈரானிய வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அராக்கி தெரிவிக்கையில், அமெரிக்கா தனது அதிகபட்ச அழுத்தமளிப்பது என்ற கொள்கையை மாற்றாவிட்டால் பேச்சுவார்த்தை சாத்தியமல்ல என்றும் கூறியிருந்தார்.


அது மட்டுமின்றி, ட்ரம்பின் கடிதத்தை ஈரான் முழுமையாக ஆராய்ந்து, ஓமன் அரசின் வழியாக பொருத்தமான பதிலை அனுப்பியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேரடி பேச்சுவார்த்தையை ஈரான் நிராகரித்தமை ட்ரம்ப்க்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. ஈரான் எங்களுடன் ஒப்பந்தம் செய்யவில்லை என்றால், குண்டு வீசி தாக்குவோம், அவர்கள் இதற்கு முன்பு கண்டிராத வகையில், இந்த தாக்குதல் இருக்கும் என்று மீண்டும் எச்சரிக்கை விடுத்தார்.

மேலும் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு செய்தது போல் ஈரானுக்கு இரண்டாம் நிலை வரிகளை விதிக்க வாய்ப்பு உள்ளது என்றும் ட்ரம்ப் கூறினார். ட்ரம்ப்பின் இந்த புதிய மிரட்டலுக்கு ஈரான் தனது செயல்பாடுகள் மூலம் பதில் அளித்துள்ளது. அதாவது ஏவுகணைகளை தயார் நிலையில் வைக்கத் தொடங்கியிருக்கிறது.

அதே வேளை ட்ரம்பிக்கு பதில் அளித்த ஈரான் நாட்டின் அதிபர் மசூத் பெசஸ்கியான், அமெரிக்கா உத்தரவுகள் வழங்குவதையும், எச்சரிக்கை விடுப்பதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. நாங்கள் ஒருபோதும் அமெரிக்காவிடம் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்த மாட்டோம். அதேசமயம் மத்தியஸ்தர்கள் மூலம் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருக்கிறோம் என்றும் பதிலடி கொடுத்தார்.


உலகெங்கிலும் அமெரிக்காவுடன் தொடர்புடைய நிலைகளை குறிவைத்து தாக்கும் திறனைக் கொண்ட ஏவுகணைகளை ஈரான் ராணுவம் தயார் நிலையில் வைத்துள்ளதாக அரசு ஊடகமான தெஹ்ரான் டைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. ஏவுதலுக்கு தயார் நிலையில் உள்ள ஏவுகணைகளில் பெரும்பாலான ஏவுகணைகள், நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் உள்ள நிலத்தடி வசதிகளில் அமைந்துள்ளன என்றும், அவை வான்வழித் தாக்குதல்களை தாங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன என்றும் தகவல் வெளியாகி உள்ளது.




**அமெரிக்கா ஈரான் இடையே நீண்ட கால போர்ப் பகைமை மேலும் வலுத்துள்ளது. ஈரானுக்கு எதிராக ராணுவ பலத்தை பயன்படுத்தப் போவதாக அமெரிக்க அதிபர் டொனல்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

**மத்திய கிழக்கில் அமெரிக்காவும் நீண்ட தூர பயணம் செய்யக்கூடிய அதிசக்தி வய்ந்த குண்டுகளை கொண்டு செல்லும் திறன் வாய்ந்த பீ-2 பூமர் போர் விமானங்களை தயார் நிலையில் வைத்துள்ளது.**


**பதிலடியாக ஈரானும் நீண்ட தூர பயணம் செய்யக்கூடிய அமெரிக்காவுடன் தொடர்புடைய நிலைகளை குறிவைத்து தாக்கும் திறனைக் கொண்ட ஏவுகணைகளை தயார் நிலையில் வைத்துள்ளது.**



ஈரான் மீது அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல் நடத்தினால் அதன் பின்விளைவுகள் பேரழிவை ஏற்படுத்தும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளது.

ஈரானுக்கு அமெரிக்கா விடுத்துள்ள நிபந்தனையும், இறுதி எச்சரிக்கை போன்ற தாக்குதல் மிரட்டல் விடுப்பது முறையற்ற நடவடிக்கை. அதை நாங்கள் கண்டிக்கிறோம். அமெரிக்கா தனது விருப்பத்தை ஈரான் மீது திணிப்பதை இது காட்டுகிறது. ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் அதன் பின்விளைவுகள் மிகப் பெரிய அழிவை ஏற்படுத்துபவையாக இருக்கும்.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் கடந்த ஜனவரி மாதம் பதவியேற்றதற்குப் பிறகு, உக்ரைன் விவகாரத்தில் நாட்டின் நிலைப்பாட்டை அடியோடு மாற்றியமைத்தார். ரஷ்யாவுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் உக்



ரைனுக்கு பல்வேறு வகைகளில் நெருக்கடி கொடுத்து வருகிறார்.

இந்த நிலைப்பாடு ரஷ்யாவுக்கு சாதகமாக உள்ளதாகக் கூறப்படுகிறது. அத்துடன், ரஷ்யாவுடன் நல்லுறவை ஏற்படுத்தவும் ட்ரம்ப் முயன்றுவருகிறார். இதன் காரணமாக, சர்வதேச விவகாரங்களில் ட்ரம்ப்பை நேரடியாக விமர்சிப்பதை ரஷ்ய ஜனாதிபதி புடின் தவிர்த்துவருகிறார்.

தொடர்ந்து மோதல் போக்கால் விரைவில் ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தலாம் என்று கூறப்படுகிறது. இதனால் இருநாடுகள் இடையே கடும் பதற்றம் நிலவி வரும் சூழலில் நான்கு அரபு நாடுகள் தங்களின் வான் எல்லையில் அமெரிக்கா விமானங்கள் பறக்க அதிரடியாக தடை விதித்துள்ளன.

பொதுவாக வானில் ஒவ்வொரு நாடுகளுக்கும் வான் எல்லைகள் இருக்கும். இந்த வான்வெளி பரப்பில் விமானங்கள் பறக்க வேண்டும் என்றால் அந்தந்த நாடுகளின் அனுமதி என்பது வேண்டும்.

இப்படி அனுமதி பெற்றே அனைத்து விமானங்களும் பறந்து வருகின்றன. ஒருவேளை அனுமதியின்றி இன்னொரு நாட்டின் விமானம் ஒரு நாட்டின் வான் எல்லையில் நுழையும்போது அதனை அந்த நாட்டினரால் சுட்டு வீழ்த்த முடியும். மேலும் குறிப்பிட்ட நாட்டின் விமானங்களை ஒவ்வொரு நாடுகளும் தங்களின் வான் எல்லையில் பறக்க விடாமல் தடை செய்யவும் கூட முடியும்.

ஈரான் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்றால் பிற நாடுகளின் வான் எல்லை வழியாக அந்த நாட்டின் விமானங்கள் பறக்க வேண்டும். இப்படியான சூழலில் தான் அரபு நாடுகள் தங்களின் வான் எல்லைகளில் அமெரிக்க விமானங்கள் பறக்க அதிரடியாக தடை விதித்துள்ளன.

அதாவது அமெரிக்க விமானங்கள் ஈரான் எல்லையையொட்டிய தங்களின் வான் எல்லையில் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஈரான் மீது தாக்குதல் நடத்தும் நடவடிக்கைக்கு அரபு நாடுகளான சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கட்டார், குவைத் உள்ளிட்ட நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து இந்த தடையை விதித்துள்ளன.

இது அமெரிக்காவுக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தி உள்ளது. ஈரான் மீது உடனடியாக தாக்குதல் நடத்த முடியாத நிலை என்பது ஏற்பட்டுள்ளது. ஈரான் மீது குண்டுகளை வீசுவோம் என்று அமெரிக்கா கூறிய நிலையில் தற்போது தற்காலிகமாக இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஈரானை தாக்கும் நோக்கத்தில் அரபு நாடுகளின் வான் எல்லையில் அமெரிக்காவின் போர் விமானங்கள் மற்றும் உளவு விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த தடை என்பது வான் எல்லையில் விமானங்கள் பறப்பதற்கு மட்டுமின்றி எரிபொருள் மாற்றம் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றுக்கும் பொருந்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே அடுத்த மாதம் டொனால்ட் ட்ரம்ப் பல்வேறு அரபு நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளதாக முக்கிய தகவல்கள் வெளியாகி உள்ளன. ஈரான் மீதான தாக்குதலுக்கு அரபு நாடுகளின் ஆதரவு என்பது அமெரிக்காவுக்கு கிடைக்கவில்லை என்பது தெட்டத் தெளிவாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் உணர்வுகளை கீறி காயப்படுத்திய பிரதமர் ஹரிணி

## மன்னிப்பு கேட்க வேண்டும் என்கிறார் சிறீகாந்தா

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பிரதமர் ஹரிணி அமரசூரிய இந்து மக்களின் உணர்வுகளை கீறி காயப்படுத்தியுள்ளார். அதற்காக அவர் மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சட்டத்தரணி என். சிறீகாந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். சிறீகாந்தா மேலும் கூறுகையில்,

"மே மாதம் 6ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. தற்போது தேர்தல் சட்டம் அமுலில் இருக்கிறது. தேர்தல் சட்டங்களை கடைப்பிடிக்குமாறு தேர்தல்கள் திணைக்களம் சகல கட்சிகள், சுயேச்சை குழுக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார கூட்டங்களில் பிரதமர் ஹரிணி கலந்துகொண்டார்.

அவர் கலந்துகொண்ட தேர்தல் பிரசார கூட்டங்களில் தேர்தல் விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன. இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மகா கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் நடைபெற்ற போது, ஆலயத்தினுள் பாதுகாப்பு அதிகாரிகளுடன் நுழைந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் வழிபாட்டுக்கு இடையூறு விளைவித்துள்ளார்.

பிரதமரின் பாதுகாப்புக்காக வந்தவர்கள், காலணிகளோடு ஆலய வளாகத்துக்குள் நுழைந்துள்ளனர். இது, இந்து மக்களுக்கு மிகப் பெரிய மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

பிரதமர் ஹரிணி மாவிட்டபுரத்துக்கு சென்றது மிக மலிவான தேர்தல் பிரசாரத்துக்காகவே, மாவிட்டபுரத்துக்கு கடந்த காலங்களில் பல அரசியல்வாதிகள் வந்து சென்றிருக்கிறார்கள். அவர்கள் பக்தர்களுக்கு இடையூறு விளைவிக்கவில்லை.

இந்த மலிவான அரசியலுக்கு நாம் கடுமையான கண்டனங்களை தெரிவிக்கிறோம்.

இந்து மக்களின் உணர்வுகளை கீறி காயப்படுத்தியுள்ளார். எனவே, பிரதமர் ஹரிணி தனது செயலுக்காக மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். இதற்காக பிரதமர் என்ன சொல்லப்போகிறார் ?

அதேபோன்று நேற்று முன்தினம் காரைநகர் மற்றும் நீர்வேலி பகுதியில் ஆலய வளாகத்தில் மேடை அமைத்து, தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் பிரதமர் ஈடுபட்டிருந்தார்.

இவ்வாறான மலிவான அரசியலை நாட்டின் பிரதமர் செய்யக்கூடாது.

வடக்கை நோக்கி பல அரசியல்வாதிகள் உள்ளூராட்சி தேர்தலுக்காக படையெடுத்து வருகின்றனர். அவர்கள் தங்கள் அரசியல் நடவடிக்கைகளை மதத் தலங்களில் மேற்கொள்ள வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம். மலிவான அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதை அரசாங்கம் கைவிட வேண்டும்.

தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகள் தமது கடமைகளைச் சரியாக மேற்கொள்ள வேண்டும்"- என்றார். (எ)

# நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது

## பிரதமர் ஹரிணி யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 13

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது. எனவே, மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்தைப் போன்றே அரசாங்க சேவைப் பிரிவுகளும் பணியாற்ற வேண்டும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள பிரதமர் ஹரிணி நேற்று வேலணை, நீர்வேலி மற்றும் வடமராட்சி ஆகிய இடங்களில் மக்கள் சந்திப்புகளில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"வடக்கு மாகாணத்தில் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் பல சிக்கல்கள் உள்ளன. வீதிகள், நீர், விவசாயம், வேலைவாய்ப்பின்மை, கல்வி மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட ஒவ்வொரு துறையிலும் பிரச்னைகள் உள்ளன.

இந்தப் பிரச்னைகளில் பல, உங்கள் பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேச சபைகள் மற்றும் மாகாண சபைகளால் செய்யப்படவேண்டிய அபிவிருத்திப் பணிகளாகும். ஆனால், அது சரியாக நடைபெறவில்லை.

வடக்கு, கிழக்கில் உள்ள பிரச்னைகள் போரினால் ஏற்பட்டவை என்று கூறினார்கள். போர் முடிந்து 16 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், என்ன மாற்றம் ஏற்பட்டுள்ளது? இந்தப் பகுதிகளில் மக்களின் வாழ்க்கை நிலை முன்னேற்றமடைந்துள்ளதா?

உள்ளூராட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு நிதி ஒதுக்குகிறது. ஆனால், குறித்த திட்டங்களுக்குப் பணம் சரி யாகச் செலவிடப்படுவதை உறுதி செய்வதற்கு ஒரு வெளிப் படையான பொறிமுறை தேவை.

மே மாதம் 6ஆம் திகதி கிராமத்தை அபிவிருத்தி செய்யுங்கள். உங்கள் வாழ்க்கை நிலையை மேம்படுத்த உங்களுக்கு மிக நெருக்கமான மிகச் சிறிய அரசாங்கத்தை நியமிக்கும் முக்கிய உரிமை உங்களுக்கு கிடைத்துள்ளது. மோசடி அல்லது ஊழல் இல்லாமல் மக்களுக்கு சேவை செய்ய அர்ப்பணிப்புள்ள பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய நடவடிக்கை எடுங்கள்.

நாடு வீழ்ந்திருக்கும் சூழ்நிலையிலிருந்து மீள்வதற்கும், பொருளாதார சவால்களை வெற்றி கொள்வதற்கும் அரசாங்கம் தற்போது நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. எல்லா விடயங்களும் இன்னும் சரியாக நடக்கவில்லை என்பதும், பொருட்களின் விலைகள் இன்னும் குறையவில்லை என்பதும் எங்களுக்குத் தெரியும். அரசாங்கம் அவற்றையெல்லாம் மாற்றி வருகிறது. எதிர்காலத்தில் மக்கள் அந்த பயன்களைப் பெறுவார்கள்.

இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அரசாங்க சேவை மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும். மக்களின் அரசாங்கத்தைப் போலவே, மக்களின் அரசாங்க சேவை என்ற நிலை உருவாக வேண்டும்.

சுதந்திரத்துக்குப் பின்னர், இந்த நாட்டில் பெரும் இரத்தக் களரி ஏற்பட்டது. மோதல்கள் ஏற்பட்டன. இதனால் மக்கள் பெரும் அவதிக்குள்ளானார்கள். இந்த நாட்டில் மீண்டும் அந்த நிலை ஏற்படாமல் இருப்பதை அரசாங்கம் உறுதி செய்யும். நாட்டில் நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது"- என்றார். (எ)

# தமிழில் முறைப்பாடுகளை வழங்க தொலைபேசி இலக்கம்

கொழும்பு, ஏப். 13

தமிழ் மொழியில் முறைப்பாடுகளை வழங்குவதற்கு 107 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொள்ள முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கம் 24 மணி நேரமும் சேவையில் இருக்கும் என பொலிஸார் கூறினர்.

இதனால் தமிழ் மக்கள், தாய் மொழியில் இலகுவாக முறைப்பாடுகளை செய்ய முடியும் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

# புத்தாண்டை முன்னிட்டு களைகட்டிய வியாபாரம



வவுனியா, ஏப். 13

தமிழ் - சிங்கள புதுவருடப் பிறப்பை முன்னிட்டு வவுனியாவில் வியாபாரம் களை கட்டியுள்ளதுடன், நகரில் அதிக சன நெரிசல்களையும் அவதானிக்க முடிகிறது.

2025 ஆம் ஆண்டு சித்திரைப் புத்தாண்டு நாளை 14 ஆம் திகதி திங்கட்கிழமை பிறக்கவுள்ள நிலையில் அதனைக் கொண்டாடும் வகையில் வவுனியா நகருக்கு அதிகளவிலான மக்கள் வருகை தந்து புத்தாடைகள், வெடிகள், இனிப்பு பண்டங்களை கொள்வனவு செய்வதை அவதானிக்க முடிந்தது.

கடந்த வருடத்தை விட இம்முறை புத்தாண்டு வியாபாரம் களை கட்டியுள்ளதுடன், மக்கள் புத்தாண்டு கொண்டாட்டத்துக்கு ஆர்வத்துடன் தயாராகி வருகின்றனர். (எ-10)

16 சிறுவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகம்:

# விளையாட்டு பயிற்றுநர் விரைவில் கைதாவாராம்

## மனிதவுரிமை ஆணைக்குழுவிடம் கிளிநொச்சி பொலிஸார் உறுதி

கிளிநொச்சி, ஏப். 13

கிளிநொச்சியில் 16 சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள விளையாட்டுப் பயிற்றுநர் விரைவில் கைது செய்யப்படுவார் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜிடம் கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உறுதியளித்துள்ளனர்.

சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பான சட்ட நடவடிக்கைகள் குறித்து நேற்றுச் சனிக்கிழமை கனகராஜ், கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு தொடர்பு கொண்டு கேட்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஒருவர் 16 சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவம் கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

பாடசாலையொன்றின் சிற்றூழியராக பணியாற்றும் இந்த நபர் விளையாட்டு ஒன்றின் பயிற்றுவிப்பாளராகவும் செயல்பட்டு வருகிறார். இவரிடம் விளையாட்டுப் பயிற்சி பெற்றுவந்த சிறுவர்களில் 16 பேரை அவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

இந்த சிறுவர்கள் 10 - 13 வயதுக்குட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களில் சிலரது நடத்தைகளில் மாற்றமும் கல்வியில் திடீர் பின்னடைவும் அவதானிக்கப்பட்ட நிலையில், சிறுவர்கள் இருவர் மூலமே பாலியல் துஷ்பிரயோகத்துக்கு சிறுவர்கள் உட்படுத்தப்பட்ட விடயம் வெளியே தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பாடசாலை நிர்வாகம் மற்றும் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டதை தொடர்ந்து, பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு பெற்றோர் மற்றும் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் அழைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டதாகவும் வாக்குமூலத்தின் அடிப்படையில் தொடர் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், சந்தேக நபரை இதுவரை கைது செய்யாத பொலிஸார் பாதிக்கப்பட்ட சிறுவர்களை குற்றவாளிகள் போல் நடத்துவதாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை பாடசாலைக்குச் சென்ற பொலிஸார் சிறுவர்களை மாலை 04. 00 மணி வரை அறை ஒன்றில் அடைத்து வைத்ததாகவும் அவர்களை பொலிஸ் வாகனத்தில் பொலிஸ் நிலையம் வரை கொண்டுசெல்ல முற்பட்டபோது சிறுவர்கள் பயத்தில் அழுததாகவும் தெரிவிக்கப்பட்டது.

மாலை நான்கு மணி வரை மதிய உணவின்றி சிறுவர்களை பொலிஸார் பாடசாலையின் அறையில் அடைத்து வைத்ததையடுத்து, பெற்றோர்கள் பொலிஸாருடன் முரண்பட்டுள்ளனர்.

"பிள்ளைகள் குற்றவாளிகள் அல்ல, அவர்கள் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், எனவே அவர்களின் மன நிலையை புரிந்துகொண்டு பொலிஸார் நடந்துகொள்ள வேண்டும்"- என பொலிஸாருக்கு வலியுறுத்தியதோடு விசாரணைகளுக்காக பிள்ளைகளை தாமே பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வருவதாகவும் பொலிஸ் வாகனத்தில் ஏற்றிச் செல்ல அனுமதிக்க முடியாது எனவும் பெற்றோர்கள் தெரிவித்த பின்னர் பொலிஸார் அங்கிருந்து சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் பெற்றோர்களின் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்தோடு, சிறுவர்களின் மன நிலை பாதிக்கப்படும் என்பதை உணர்ந்து பெற்றோர் இந்த பிரச்னையிலிருந்து தாமாக விலகிக்கொள்ளும் வகையில் பொலிஸாரின் நடவடிக்கைகள் அமைந்திருப்பதாகவும் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதான...

மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் கடந்த 8 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

2006 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வாகனத்தில் பயணித்த நிலையில், அவர் கொழும்பில் வைத்து கடத்தப்பட்டுக் காணாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தண்டனை...

சத்சர நிமேஷ் என்ற இளைஞர் கடந்த 2 ஆம் திகதி உயிரிழந்த நிலையில், அவர் பொலிஸாரால் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டதாகவும், அவரது உடலில் கடுமையான காயங்கள் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இது குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளடங்கலாக மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பலரும் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதுபற்றி இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவிக்கையில்-

கடந்த 2 ஆம் திகதி பொலிஸ் காவலின்கீழ் பதிவான சத்சர நிமேஷின் உயிரிழப்பு, கடந்த பல ஆண்டுகளாகப் பதிவாகிவரும் பொலிஸ் காவலின் கீழான உயிரிழப்புச் சம்பவங்களின் பட்டியலில் ஒன்றாகச் சேர்ந்திருக்கிறது.

அதுமாத்திரமன்றி இச்சம்பவமானது இலங்கையின் பொலிஸ் நிலையங்களிலும், சிறைச்சாலைகளிலும் சந்தேக நபர்கள் மற்றும் கைதிகள் எத்தகைய மோசமான, மனிதாபிமானமற்ற நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மையை மீண்டுமொரு முறை உணர்த்துகிறது.

இருப்பினும் உயரதிகாரத்தில் இருப்பவர்களால் இந்த உண்மையை உணரமுடியவில்லை அல்லது அவர்கள் உணர மறுக்கிறார்கள்.

பொலிஸ் நிலையத்திலோ அல்லது சிறைச்சாலையிலோ இடம்பெறும் பொலிஸ்காவலின் கீழான உயிரிழப்புக்கள் தொடர்பில் சுயாதீன அதிகாரிகளால் உடனடியாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

மாறாக அத்தகைய சம்பவங்களுக்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் தொடர்ந்து அதிகாரத்தில் இருக்கும் போது, சில மணித்தியாலங்களின் பின்னரோ அல்லது சில நாட்களின் பின்னரோ குறித்த சம்பவம் பற்றிய விசாரணைகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைப்பதால் எவ்வித பயனுமில்லை.

ஏனெனில் அவ்வேளையில் பெருமளவான ஆதாரங்கள் அழிக்கப்பட்டோ அல்லதுசாட்சியங்கள் சிதைக்கப்பட்டோ இருக்கக்கூடும். அதுமாத்திரமன்றி பொலிஸ்காவலின் கீழிருந்த பிறிதொரு நபர் அச்சம்பவத்தைப் பார்த்திருந்தாலும், அவர் தனது பாதுகாப்பு குறித்த அச்சத்தின் காரணமாக சாட்சியமளிக்க முன்வருவது மிகக்கடினமானதாகும்.

கடந்த பல ஆண்டுகளாக பெரும் எண்ணிக்கையானோர் பொலிஸ் மற்றும் சிறைச்சாலைக் காவலில் உயிரிழந்திருக்கின்றனர். இருப்பினும் அச்சம்பவங்கள் தொடர்பில் அர்த்தமுள்ள நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் மிக அரிதாகும்.

மேலும் பொலிஸ் காவலின் கீழான உயிரிழப்புக்கள் தன்னிச்சையான கைதுகள் மற்றும் தடுத்துவைத்தல் என்பவற்றுடன் நெருங்கிய தொடர்புடையவை என்பதையும், அவை தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் கலாசாரம் உருவாவதற்கு வழிவகுக்கின்றன என்பதையும் பெரும்பாலானோர் புரிந்துகொள்வதில்லை-என்றார். (அ)

## வாக்குச்...

குறிப்பிடப்பட்டுள்ளது.

வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணிகள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்குள் நிறைவடையும் என அரச அச்சகர் பிரதீப் புஷ்ப குமார தெரிவித்தார். (அ)

## சஜித்தை...

சுமார் 30 நிமிடங்கள் வரை இடம்பெற்ற இந்த சந்திப்பில், இலங் கைக்கு எத்தகைய உதவியை இந்தியாவிட மிருந்து எதிர் பார்க்கின்றீர்கள் என்று பிரதமர் நரேந்திர மோடி, எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் வினவியுள்ளார்.

இதற்கு பதிலளித்த சஜித் பிரேமதாஸ, கொவிட் பெரும் தொற்றின்போதும், அதன் பின்னரான பொருளாதார நெருக்கடியின் போதும் இந்திய உதவி கிடைத்திருக்காவிடின் இலங்கையால் இந்தளவு சீக்கிரம் மீண்டிருக்க முடியாது.

எனவே, எதிர்வரும் நாட்களிலும் பொருளாதாரத்தில் இருந்து மீள்வதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும்.

ஆகவே, இலங்கைக்கு ஆதரவாக இந்தியாவின் தொடர் ஒத்துழைப்பு அவசியம் என கோரிக்கை விடுத்தார்.

இதன் பின்னர் டில்லிக்கு விஜயம் செய்யுமாறு எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அழைப்பு விடுத்தார்.

சந்திப்பில் பங்கேற்றிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய் சங்கரிடம் விஜயத்திற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு பிரதமர் மோடி இதன்போது ஆலோசனை வழங்கினார். (அ)

## இலங்கை...

வசதி திட்டத்தின் கீழான நான்காவது மதிப்பாய்வுக்கான அடிப்படை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளது.

இதன்படி, உலகளாவிய நிச்சயமற்ற தன்மை, இலங்கையின் நிதிச் சந்தையை ஏற்ற இறக்கத்திற்கு வழிவகுத்துள்ளது.

இலங்கை முன்னெடுத்துள்ள செயல்பாடுகள் பாராட்டத்தக்கது எனவும் சர்வதேச நாணய நிதியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் வெளிப்புற அதிர்ச்சியின் காரணமாக இலங்கையில் ஏற்படும் தாக்கங்களை மதிப்பிடுவதற்கு அதிகக் காலம் தேவைப்படுவதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிலையான வருவாய் திரட்டல் முயற்சிகள் அவசியமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வரி விலக்குகளைத் தவிர்ப்பது நிதி வருவாய் கசிவுகளைத் தடுப்பதற்கு உதவும்.

மின்சாரக் கட்டணக் கிரயத்தை ஈடு செய்யும் கட்டணம் தொடர்பில் அவதானம் செலுத்தப்படவேண்டும் எனவும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. (அ)

## அமெரிக்க...

செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட 44 சதவீத பரஸ்பர தீர்வை வரி குறித்து ஆராய்வதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு அமெரிக்காவின் வர்த்தகத்துறை பிரதிநிதிகளுடன் இரண்டு முறை பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார்கள்.

வரி விவகாரத்தில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வலியுறுத்தி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அமெரிக்க ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இதற்கு மாறாக நிதி அமைச்சு சார்பில் அமெரிக்காவின் வர்த்தக துறைக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே கிடைக்கப்பெற்றுள்ள 90 நாட்களை சிறந்த முறையில் பயன்படுத்திற் கொள்ளும். குறித்த வரி விதிப்பில் இலங்கைக்கு நிவாரணம் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது என்றார். (அ)

# தமிழ்மொழியில் தண்டப்பத்திரம் கோரிய சாரதியைக் கைது செய்தனர் பொலிஸார்!

வவுனியா, ஏப். 13



வவுனியா குருமன்காட்டுச் சந்தியில் நேற்று காலை வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் தமிழ்மொழியில் தண்டப்பத்திரம் கோரிய சாரதியை கையை பிடித்து அமுக்கி ஓட்டோவில் ஏற்ற முற்பட்டமையால் பதற்ற நிலைமை ஏற்பட்டது.

வாகனச் சாரதியோருவர் வர்த்தக நோக்கத்திற்காக குருமன்காட்டுச் சந்தியில் வாகனத்தை நிறுத்தியுள்ளார். இதன்போது வாகனத்தை அவ்விடத்தி லிருந்து அகற்றுமாறு போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளார்.

எனினும் வர்த்தக நிலையத்திற்கு பொருட்களை இறக்குவதால் சிறிது நேரம் கால அவகாசம் தருமாறு வாகன சாரதி கோரிய சமயத்தில் போக்குவரத்து பொலிஸார் வாகன திறப்பை எடுத்துக் கொண்டு சென்றுள்ளனர்.

இதன்போது வாகனத்தை நிறுத்தத் தடை செய்யப்பட்ட இடத்தில் வாக னத்தை நிறுத்தியமை என சிங்கள மொழியில் பொலிஸார் தண்டப்பத்திரம் வழங்கினர்.

தமக்கு என்ன குற்றம் எனத் தெளிவில்லை. எனவே தமிழ்மொழியில் தண்டப்பத்திரம் கோரியமையினால் வாகன சாரதி - போக்குவரத்து பொலிஸாருக்கிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

அதன் பின்னர் அவ்விடத்திற்கு வருகை தந்த வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி, கடமைக்கு இடையூறு என தெரிவித்து குறித்த வாகனச் சாரதியினை முச்சக்கரவண்டியில் பொலிஸ் நிலையத்திற்கு ஏற்றிச் செல்ல முற்பட்ட சமயத்தில் அவ்விடத்தில் பதற்ற நிலைமை ஏற்பட்டது.

எந்த தவறும் செய்யாது என்னை எவ்வாறு கைது செய்ய முடியும். அவ்வாறு தவறு செய்தால் தண்டப்பத்திரம் தானே வழங்க வேண்டும் என கூறிய வாகனச் சாரதி,

முச்சக்கரவண்டியில் ஏற மறுப்பு தெரிவித்தமையடுத்து போக்குவரத்து பொலிஸார் குறித்த வாகனச் சாரதியினை தலையைப் பிடித்து இழுத்து கையை பிடித்து அமுக்கி முச்சக்கரவண்டியில் ஏற்றி வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு ஏற்றிச்சென்றனர்.

வாகன சாரதி மீது வவுனியா போக்குவரத்து பொலிஸார் வழக்கு தாக்கல் மேற்கொண்டு பொலிஸ் தடுப்பு காவலில் வைத்துள்ளனர்.

(அ-10)

# இந்தியப் பிரஜை கைது!

கொழும்பு, ஏப். 13

டுபாயில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத் திற்கு வந்த விமானத்தில் பெண் பயணி ஒருவரை பாலி யல் ரீதியாக இம்சித்த குற்றச்சாட்டில் இந்தியப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று காலை டுபாயிலிருந்து பிட்ஸ் எயார் விமானத்தின் மூலம் வந்ததாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

சந்தேக நபர் விமானத்தில் குறித்த பெண்ணைத் துன் புறுத்தியதாகவும், இது குறித்து விமான பணிக் குழாமினருக்கு அவர் அறியப்படுத்தியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கிய பின்னர், விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளுக்கு இது குறித்து அறிவிக்கப்பட்ட நிலையில் குறித்த அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 35 வயதுடைய இந்தியப் பிரஜை எனவும் அவரை நீதிமன்றில் முன்னி லைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(அ)

## அடிப்படை...

அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியாக அனுர குமார திஸாநாயக்க நியமிக்கப்பட்ட பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்டுக்கு நேற்று முதன் முறையாக விஜயம் செய்தார்.

தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட நிறைவேற்று குழுவின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மகாத்மா காந்தி பூங்காவில் ஜனாதிபதி தலைமையிலான மக்கள் சந்திப்பு இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் 'வெற்றி நமதே ஊர் நமதே'யின் வெற்றிக் கூட்டமாக இந்த கூட்டம் நடைபெற்றது.

வெளிநாட்டு அலுவல்கள் பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திர, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளர்கள், உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொண்டனர். (அ)

## தையிட்டி...

என தெரிவித்த போராட்டக் காரர்கள், எமது நிலத்தை மீட்கும் வரைக்கும் போராட்டம் தொடர்ந்து செல்லும் என கூறினர்.

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிரான போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரும் இணைந்து கொண்டனர்.(அ)

## மன்னார்...

கொண்டு வேட்பாளர்களை ஆதரித்து உரை நிகழ்த்தினர்.

மேலும், இந்த கூட்டத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

பிரதமரின் நானாட்டான் பகுதிக்கான விஜயத்தையொட்டி நானாட்டான் பகுதியில் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# அமெ. வரி சுனாமில் இருந்து மீள வியூகம் வகுக்கின்றது இலங்கை!

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 13

**“அமெரிக்காவின் வரி சுனாமியில் இருந்து தப்பிப்பதற்குரிய வியூகங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. சிலவேளை வரி சுனாமியில் சிக்க நேரிட்டால் அதிலிருந்து மீள்வதற்குரிய திட்டங்களும் வகுக்கப்பட்டுவருகின்றன.” - என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**



கண்டியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

அமெரிக்காவின் வரி விதிப்பு காரணமாக இலங்கையின் பொருளாதாரத்துக்கு தாக்கம் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் உள்ளது. இந்த சவாலுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டும்.

உலக நாடுகளில் ஏற்படும் போர் மற்றும் தொற்று நோய்கள் போன்ற காரணங்களால் எந்நேரத்திலும் பொருளாதாரத்துக்கு தாக்கம் வரக்கூடும். எனவே, எந்த சூழ்நிலையையும் தாங்கிக்கொள்ளக்கூடிய வகையிலான பொருளாதாரத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

இப்பிரச்சினையை தீர்த்துக் கொள்வது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதிக்கு நான் தனிப்பட்ட ரீதியில் கடிதம் எழுதியுள்ளேன். அக்கடிதம் கிடைத்தது என தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வரி சுனாமியால் இலங்கையின் பொருளாதாரத்துக்கு தாக்கம் ஏற்படாத வகையிலான முடிவுகளை எடுப்பதற்கு முயற்சித்துவருகின்றோம். அந்த சுனாமியில் இருந்து தப்பிப்பதற்கு வியூகம் வகுக்கப்படுகின்றது. சிலவேளை சுனாமியின் சிக்க வேண்டியேற்படின் அதற்கு முகங்கொடுப்பதற்கும் வியூகம் வகுக்கப்படுகின்றது - என்றார். (அ)

# தேர்தல் சட்ட மீறல் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 13

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் மார்ச் மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் நேற்று முன் தினம் வரை மாத்திரம் பதிவாகியுள்ள 1206 முறைப்பாடுகளில் 1145 தேர்தல் சட்ட மீறல்கள் பற்றிய முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

மேலும் 6 வன்முறைச் சம்பவங்களும் 55 ஏனைய சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# யாழ்ப்பாண வர்த்தகர்களை சந்தித்தார் அமைச்சர் விஜித!

யாழ்ப்பாணம், ஏப். 13

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் நேற்று யாழ்ப்பாண வர்த்தகர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமைச்சர், உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றார்.

நேற்று மதியம் தனியார் விருந்தினர் விடுதியில் யாழ்ப்பாண வர்த்தகர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதில், கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஸ்ரீபவானந்தராஜா உட்பட வேட்பாளர்கள் பங்கேற்றனர்.

இதன்போது, சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்திடம், மஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (அ)

# மரக்கறிகளின் விலை உயர்வு!

கொழும்பு, ஏப். 13

தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் கேள்விக்கேற்ற விநியோகம் இல்லாமையின் காரணமாக உள்நாட்டுச் சந்தையில் மலையக மற்றும் தாழ் நிலப் பகுதிகளில் விளையும் மரக்கறிகளின் விலை திடீரென அதிகரித்துள்ளதாக மரக்கறி மொத்த மற்றும் சில்லறை மரக்கறி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, போஞ்சி ஒரு கிலோகிராம் 600 - 700 ரூபாய் வரையிலும். கத்தரிக்காய் ஒரு கிலோகிராம் 600 ரூபாய், ஒரு கிலோகிராம் கரட்டின் விலை 400 ரூபாய், நுவரெலியா உருளைக்கிழங்கு ஒரு கிலோகிராமின் விலை 600 ரூபாய், ஒரு கிலோகிராம் தக்காளி 800 ரூபாய்க்கும், ஏனைய அனைத்து மரக்கறிகளும் 400 ரூபாய் முதல் 500 ரூபாய் வரையிலும் சில்லறை விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

தேங்காய் ஒன்றின் விலை 180 ரூபாயிலிருந்து 220 ரூபாய் வரை சில்லறைக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

கடந்த சில தினங்களாக நிலவிய தொடர் மழையின் காரணமாகவும் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# சகல சூரிய மின்சக்தி படலங்களையும் செயலிலிருந்து நீக்குமாறு கோரிக்கை!

கொழும்பு, ஏப். 13

இன்று முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை கூரைகளில் பொருத்தப்பட்டிருக்கும் சூரியசக்தி படலங்களைப் பகல் நேரங்களில், மாலை 3:00 மணி வரை அணைக்குமாறு இலங்கை மின்சார சபை கோரியுள்ளது. அதற்கமைய, தங்கள் சூரிய படல அமைப்புகளைத் தாமாக முன்வந்து அணைக்குமாறு கூரை சூரிய மின்சக்தி படலங்களின் உரிமையாளர்கள் கோரப்பட்டுள்ளனர்.

நீண்ட விடுமுறை காலத்தில் தேசிய மின்சார தேவையில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் அதிக சூரிய மின் உற்பத்தி காரணமாக, தேசிய மின்சாரக் கட்டமைப்பில் அழுத்தம் ஏற்பட்டுள்ளதால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (அ)

# பட்டலந்த விவாதத்தினால் அரசாங்கத்துக்கே பாதிப்பு

## ஐ.தே.க.வின் தவிசாளர் வஜிர கூறுகிறார்

கொழும்பு, ஏப். 13

ஜனநாயகத்துக்கு தோட்டாவால் அச்சுறுத்தல் ஏற்படும்போது பெரும்பான்மையானவர்களின் விருப்பத்துக்கு அமைய அரசியலமைப்பின் பிரகாரம் ஜனநாயகத்தை பாதுகாப்பது ஆட்சியாளர்களின் பொறுப்பாகும் அவ்வாறு செயற்படுவது நல்லதாகவும் இருக்கலாம் மோசமானதாகவும் இருக்கலாம். இவ்வாறான நிலைமையில் பட்டலந்த விவகாரத்தை பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொண்டுள்ளதன் மூலம் அதன் பாதிப்பு அரசாங்கத்துக்கு ஏற்படுமென ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் பட்டலந்த விவகாரத்தை பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொண்டுள்ளதன் மூலம் அதன் பாதிப்பு அரசாங்கத்துக்கு ஏற்படும்.

உண்மையில் இது விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளாமல் இருக்க வேண்டியதொன்றாகும். ஜனநாயக ரீதியில், தேர்தல் மூலம் அதிகாரத்துக்கு வந்த கட்சி ஒன்று, தோட்டாக்களினால் ஆட்சி செய்ய முடியாது.

எடுத்துக்காட்டாக, 1987ஆம் ஆண்டு மாகாணசபை தேர்தலுக்கு வேற்புமனு கோரப்பட்டிருந்தது. தேரதலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தவர்களின் வீட்டு வாசலில் வேட்பாளர் பதவியில் இருந்து இராஜினாமா செய்வதாக தெரிவித்து கடிதம் ஒன்றை எழுதி தொங்கவிடுமாறு அன்று இருந்த ஆயுத படை ஒன்று அறிவித்திருந்தது.

இராஜினாமா செய்யாத வேட்பாளர்கள் நூற்றுக்கும் அதிகமானவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அதனால் மாகாண சபை தேர்தலை நடத்த முடியாமல் போனது. அதனால் ஜனநாயகத்துக்கு தோட்டாவால் அச்சுறுத்தல் ஏற்படும்போது பெரும்பான்மையானவர்களின் விருப்பத்தின் பிரகாரம் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு அரசியலமைப்பின் பிரகாரம் ஆட்சியாளர்களுக்கு பொறுப்பு இருக்கிறது. அவ்வாறு செயற்படுவது நல்லதாகவும் இருக்கலாம் மோசமானதாகவும் இருக்கலாம். அதனால் இவ்வாறான நிலைமையில் அதுதொடர்பில் மீண்டும் கதைப்பதால் பாதிப்பு ஏற்படப்போவது ஆளும் அரசாங்கத்துக்கே அன்றி வேறு யாருக்கும் அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இதேவேளை, அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பினால் எந்த பிரயோசனமும் இல்லை. ஏனெனில் 77 வருடங்களாக நாட்டில் தேங்காய் ஒன்றின் விலை 80 ரூபா முதல் 100 ரூபா வரை இருந்தது. அதனால் மக்களுக்கு வாழ்வது மிகவும் கஷ்டமான நிலை என தெரிவித்து ஜனவரி மாதம் முதல், அரச ஊழியர்களின் சம்பளத்தை 25ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

தேங்காய் விலை 80, 100 ரூபாவாக இருக்கும்போதே ரணில் விக்ரமசிங்க அரச ஊழியர்களின் சம்பளத்தை 25 ஆயிரமாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்திருந்தார். ஆனால் தற்போது தேங்காய் ஒன்றின் விலைக்கு அமைய அரச ஊழியர்களின் சம்பளத்தை 50ஆயிரம் ரூபா வரை அதிகரித்திருக்க வேண்டும்.

அரச துறை மாத்திரமல்லாது ஒட்டுமொத்த இலங்கையின் அனைத்து துறைகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக சம்பள அதிகரிப்பில் அரச துறையில் மத்திய நிலையில் இருப்பவர்களுக்கு பாரிய அநீதி ஏற்பட்டிருக்கிறது.

இதன் பெறுபேறு எதிர்வரும் டிசெம்பர் மாதமாகும்போது கிடைக்கும். இலங்கை வரலாற்றில் மிகவும் மோசமான நிலைக்கு நாங்கள் முகம்கொடுக்க நேரிடும் என்பதை எனது அரசியல் வாழ்க்கை அனுபவத்தில் தெரிவிக்கிறேன் - என்றார். (அ)

# அமெரிக்க வரி விதிப்புக்கு இலங்கை சர்வதேச ரீதியாக பதில் கூறவேண்டும்

## வெரிட்டே ரிசேர்ச் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 13

அமெரிக்காவின் பரஸ்பர வரி விதிப்புக்கு எதிராகத் தனித்தனியாகப் பிரசாரங்களை மேற்கொள்வதற்குப் பதிலாகச் சர்வதேச ரீதியிலான பதிலளிப்புக்கு இலங்கை செல்ல வேண்டும் என வெரிட்டே ரிசேர்ச் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம், அமெரிக்காவின் வரி விதிப்புக்கு எதிராக உலகளாவிய தரப்புடன் இணைந்து பொதுவான பதிலை உருவாக்க வேண்டும் என அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்காவின் வரி விதிப்பானது, உலக வர்த்தக ஸ்தாபனத்தின் விதிகளிலிருந்து விலகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக வர்த்தக ஸ்தாபனத்தில் 166 நாடுகள் அங்கம் வகிக்கின்ற நிலையில் அந்த நாடுகள் சுமார் 98 சதவீத சர்வதேச வர்த்தகத்தை உள்ளடக்கியுள்ளன.

தற்போது நாடுகள் தனித்தனியாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகின்ற போதிலும் சகல தரப்பும் இணைந்து பலதரப்பு அணுகு முறையை உருவாக்க வேண்டும் என வெரிட்டே ரிசேர்ச் தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] வேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org